□□□□□□□□□□□□□□□□
□□□□□□□□

□□□□□ 2

□□□□□□□□□□□□□

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட, எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

ii

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

Thirdmill [illegible] IRS [illegible] [illegible] 501(c)(3) [illegible] [illegible]. [illegible], [illegible], [illegible] [illegible] [illegible] [illegible], [illegible], [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] www.thirdmill.org. [illegible] [illegible].

[illegible], [illegible] [illegible] [illegible] [illegible] Third Millennium Ministries (thirdmill.org) [illegible] [illegible].

[redacted]

[redacted]

[redacted]

- [redacted]
  - [redacted]
  - [redacted]
- [redacted]
  - [redacted]
  - [redacted]
- [redacted]
  - [redacted]
  - [redacted]
- [redacted]
  - [redacted]
  - [redacted]

[redacted]

- [redacted]
- [redacted]
- [redacted]
  - [redacted], [redacted]
  - [redacted], [redacted]
  - [redacted], [redacted]
  - [redacted]

[redacted]

- [redacted]
  - [redacted]
  - [redacted]
  - [redacted]
- [redacted]
  - [redacted]
  - [redacted]
- [redacted]
  - [redacted]
  - [redacted]
  - [redacted]

[redacted]

[redacted], [redacted] [redacted] [redacted] [redacted] [redacted] Third Millennium Ministries (thirdmill.org) [redacted] [redacted].

[redacted]

[redacted] [redacted] [redacted] [

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

கட்டமைப்பு வடிவங்களைப் பற்றி பேசுவோம். அப்போஸ்தலர் புத்தகத்தை எழுதுவதற்கு லூக்கா கூறிய நோக்கத்தை முதலில் பார்க்கலாம்.

கூறப்பட்ட நோக்கம்

மக்கள் நீண்ட மற்றும் சிக்கலான புத்தகங்களை எழுதும்போது, அவர்கள்
பொதுவாக பல நோக்கங்களை கொண்டிருப்பார்கள். லூக்கா சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் இரண்டு தொகுதி படைப்பை எழுதிய லூக்காவும் அதைத் தான் செய்தார். அவரது எழுத்து தெயோப்பிலு மற்றும் சபையின் வாழ்க்கையை பல்வேறு வழிகளில் பாதிக்கும் என்று அவர் நம்பினார். எனவே, அவருடைய நோக்கங்களை மிகைப்படுத்தாமல் நாம் கவனமாக இருக்க வேண்டும். அப்படியிருந்தும், லூக்கா தனக்கு ஒரு நோக்கம் இருப்பதாக வெளிப்படையாகக் கூறினார்.
லூக்கா தனக்கு இரண்டு நோக்கங்கள் இருப்பதாகத் தெளிவாகக் கூறினார். ஒருபுறம், லூக்கா தனக்கு வரலாற்று நோக்கங்கள் இருப்பதாக அறிவித்தார், முதல் நூற்றாண்டில் சபையின் உண்மையான மற்றும் நம்பகமான வரலாற்றுக் கணக்கை எழுத அவருக்கு விருப்பமாக இருந்தது. மறுபுறம், அவர் குறிப்பிடத்தக்க இறையியல் நோக்கங்களைக் கொண்டிருப்பதாக அறிவித்தார், மேலும் சுவிசேஷத்தின் உண்மை மற்றும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தவும் உறுதிப்படுத்தவும் விரும்பினார். லூக்காவின் இரு மடங்கு நோக்கத்தின் இரு அம்சங்களைப் பார்ப்போம். முதலில் ஒரு உண்மையான வரலாற்றுக் கணக்கை எழுதும் அவருடைய நோக்கத்துடன் தொடங்குவோம்.

வரலாற்று கணக்கு

அவரது சுவிசேஷத்தின் முன்னுரையில், அதாவது லூக்கா 1:1-3 இல்,
ஆரம்பகால சபையின் உண்மையான வரலாற்றை எழுதுவதில் தான் மிகுந்த அக்கறை கொண்டிருந்ததாக லூக்கா சுட்டிக்காட்டினார். அவருடைய வார்த்தையை கவனியுங்கள்:

மகா கனம்பொருந்திய தெயோப்பிலுவே, நாங்கள்
முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல்
கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத
அநேகம்பேர் ஏற்பட்டார்கள். ஆதிமுதல் எல்லாவற்றையும்
திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு
உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது
எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா 1:1-3).

உண்மையான வரலாற்றில் லூக்காவுக்கு இருந்த அக்கறை இந்த பத்தியில் பல வழிகளில் தெரிகிறது. “முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை” என்று அவர் குறிப்பிட்டார். அதாவது நடந்த சரித்திர சம்பவங்களை அவர் குறிப்பிட்டார். அவர் "கண்கண்ட சாட்சிகளை" கலந்தாலோசித்ததாகவும், அவர் பதிவு செய்த விவரங்களை "கவனமாக விசாரித்ததாகவும்" குறிப்பிட்டார். அவர் தெரிவித்த உண்மை தெளிவாகவும் துல்லியமாகவும் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதற்காக அவைகளை வரிசைப்படுத்தினார்.
சுருக்கமாக, லூக்கா சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகளின்
ஒரு உண்மையான வரலாற்றுப் பதிவை வழங்க எண்ணினார், சுவிசேஷத்தில் இயேசுவின் வாழ்க்கை தொடங்கி, அப்போஸ்தலர் புத்தகத்தில் முதல் நூற்றாண்டு சபை வரையிலான காரியங்களை பதிவு செய்தார். லூக்கா உண்மையான வரலாற்றை பதிவு செய்வதில் அக்கறை கொண்டிருந்தார், ஏனெனில் அவர் வேதம் முழுவதும் மீண்டும் மீண்டும் வரக்கூடிய ஒரு அடிப்படைக் கொள்கையான தேவன் தன்னை உண்மையான வரலாறு, இடம் மற்றும் நேரத்தில் வெளிப்படுத்துகிறார் என்பதைப்

-2-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

புரிந்துகொண்டார். அவர் தனது இரட்சிப்பு மற்றும் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவர வரலாற்றில் பணியாற்றுகிறார்.
துரதிர்ஷ்டவசமாக, சமீபத்திய நூற்றாண்டுகளில் பல விமர்சன அறிஞர்கள் "இரட்சிப்பு" மற்றும் "நியாயத்தீர்ப்பு" ஆகியவற்றின் கருத்துக்கள் உண்மையான வரலாற்றிலிருந்து பரஸ்பரம் தனித்திருக்கின்றன என்று
வாதிட்டனர். பொதுவாக, தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்கள் வரலாற்றில், உண்மையான இடம் மற்றும் நேரத்தில் நிகழ்வதில்லை என்று அவர்கள் உறுதியாகக் கூறினர். உண்மையான வரலாறு இயற்கையானது, இயற்கைக்கு அப்பாற்பட்டது அல்ல என்று அவர்கள் நம்புகிறார்கள். இதன் விளைவாக, விமர்சனம் செய்யும் இறையியலாளர்கள் வேதத்தில் தேவனுடைய செயல்களைப் பற்றி படிக்கும்போது, அவர்கள் பெரும்பாலும் இந்த கணக்குகளை உண்மையற்ற மத உணர்வுகளின் வெளிப்பாடுகள் என்று கருதுகின்றனர், இது ஒரு வகையான "பக்தியுள்ள கற்பனைக் கதை" எனப்படும்.
ஆனால் லூக்காவே தான் பக்தி கற்பனைக் கதைகளை எழுத முயற்சிக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தினார்; அவர் உண்மையான வரலாற்றை எழுதவே எண்ணினார். உண்மையில், அவர் தனது கூற்றுக்களை சரிபார்க்கும் வகையிலும் நிராகரிப்பதை எளிதாக்கும் வகையிலும் எழுதினார். ஒரு உதாரணமாக, லூக்கா தனது கணக்குகளை நன்கு அறியப்பட்ட வரலாற்று சூழல்களுக்குள் அமைத்தார். உதாரணமாக, அப்போஸ்தலர் புத்தகத்தில், 5:34 இல் கமாலியேல், 18:12 இல் கல்லியோன், 23:26 இல் பேலிக்ஸ், மற்றும் 24:27 இல் பெஸ்து போன்ற மனிதர்களைப் பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம், அவர்கள் அனைவரும் பண்டைய யூத மற்றும் ரோம உலகில் நன்கு அறியப்பட்டவர்களாக இருந்தனர். இந்த மனிதர்களின் பெயர்கள் மற்றும் பிற வரலாற்று விவரங்களைக் குறிப்பிடுவதன் மூலம், லூக்கா தனது வாசகர்கள் தனது ஆராய்ச்சியை சுயாதீனமாக ஆராய்வதை சாத்தியமாக்கினார். இந்த நபர்களும் அவரும் அறிக்கை செய்த நிகழ்வுகளைப் பற்றி அறிந்த மற்றவர்களுடன் அவர்கள் பேசலாம், சில சமயங்களில் அதே விஷயங்களைப் பற்றிய மற்றவர்களின் நூல்களைப் படிக்கலாம். லூக்காவின் அறிக்கைகள் உண்மையாக இல்லாவிட்டால், சந்தேகம் கொண்டவர்களுக்கு அவற்றை மறுப்பது எளிதாக இருந்திருக்கும்.
குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து, பல அறிஞர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகளின் வரலாற்று உண்மைத்தன்மையை பல கூடுதல் வேத நூல்கள் மற்றும் பிற தொல்பொருள் தரவுகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளனர். இந்த ஆய்வுகளில் பல, லூக்கா நம்பகமான வரலாற்றாசிரியராக இருந்த பல வழிகளைக் குறிப்பிட்டுள்ளன, ஆனால் ஒரு ஜோடி குறிப்பிட்ட உதாரணங்களைக் குறிப்பிட மட்டுமே நமக்கு நேரமிருக்கிறது.
முதலாவதாக, அப்போஸ்தலர் 28:7 இல், லூக்கா குறிப்பிட்ட வரலாற்று சொற்களைப் பற்றிய அறிவைப் பிரதிபலித்தார். அங்கு அவர் மெலித்தா தீவின் தலைவரை "தீவின் முதன்மையானவர்" என்று குறிப்பிட்டார். இந்த அசாதாரண சொற்கள் பல நூற்றாண்டுகளாக பல மொழிபெயர்ப்பாளர்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன, ஆனால் சமீபத்திய தொல்பொருள் ஆராய்ச்சி இது உண்மையில் அந்த நேரத்தில் தலைவரைக் குறிப்பதான ஒரு அதிகாரப்பூர்வ தலைப்பு என்று காட்டுகிறது.
இரண்டாவதாக, அப்போஸ்தலர் 27:21-26 இல், கப்பலில் பவுலின் செயல்களை வரலாற்று ஆராய்ச்சி மூலம் உறுதிப்படுத்திய வழிகளில் லூக்கா விவரித்தார். ஒரு பெரிய புயலின் போது பவுல் தன்னை ரோம் நகருக்கு ஏற்றிச் சென்ற கப்பலின் முழு ஊழியர்களிடமும் ஆலோசனையும் ஊக்கமும் அளித்ததாக லூக்கா எழுதினார். கடந்த காலத்தில் பல விமர்சன அறிஞர்கள், கைதியாக இருந்த பவுல் இவ்வாறு வெளிப்படையாகப் பேசுவது சாத்தியமில்லை என்று வாதிட்டனர். எனவே, அப்போஸ்தலனின் கற்பனையான வீர உருவப்படத்தை லூக்கா உருவாக்கினார் என்று அவர்கள் முடிவு செய்தனர். ஆனால், கப்பல்கள் கடுமையான ஆபத்தில் இருக்கும்போது, கப்பலில் இருந்த எவரையும் பேசவும், ஆலோசனை செய்யவும் முதல் நூற்றாண்டு கடல்சார் சட்டம் அனுமதித்ததாக சமீபத்திய ஆராய்ச்சி காட்டுகிறது.

-3-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

வரலாற்றின் உண்மைகளை உண்மையாக லூக்கா எடுத்துரைத்ததற்கு இந்த எடுத்துக்காட்டுகள் சான்றாக இருக்கின்றன. உண்மையான வரலாற்று
நிகழ்வுகளின் கணக்கை எழுதும் அவரது எண்ணம், தேவனுடைய நித்திய உண்மை எந்த வகையிலும் வாழ்க்கையின் உறுதியான உண்மைகளிலிருந்து பிரிக்கப்படவில்லை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. வேதத்தின் படி பார்க்கும்போது, உண்மையான வரலாற்றின் வழியாக இரட்சிப்பு வருகிறது. இதனாலேயே லூக்கா ஒரு உண்மையான வரலாற்றுக் கணக்கை எழுதுவதில் அக்கறை காட்டினார்.

சுவிசேஷ செய்தி

லூக்காவின் வரலாற்று நோக்கத்தை மனதில் கொண்டு, லூக்காவின் நோக்கத்தினுடைய இரண்டாவது பரிமாணமான அப்போஸ்தலர் புத்தகத்தில் சுவிசேஷ செய்தியின் யதார்த்தத்தையும் வல்லமையையும் தெரிவிக்கும் இறையியல் நோக்கத்தை நாம் குறிப்பிட வேண்டும். லூக்கா 1:3-4-ன் வார்த்தைகளை மீண்டும் ஒருமுறை கவனியுங்கள்:

ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த
நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின்
நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய்
உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா
1:3-4).

நாம் இங்கே பார்ப்பது போல, தெயோப்பிலுவும் மற்றவர்களும் கற்பித்ததை உறுதிப்படுத்துவதற்காக அப்போஸ்தலருடைய நடபடிகளின் வரலாற்றை லூக்கா எழுதினார். இதன் பொருள், அப்போஸ்தலர் புத்தகம் ஒரு வகையான மதம் சார்ந்த அல்லது போதனை சார்ந்த வரலாறாக சரியாக வகைப்படுத்தப்படலாம். தெயோப்பிலு மற்றும் அவரது மற்ற வாசகர்கள் சில பார்வைகள், சில இறையியல் நம்பிக்கைகள், சில முன்னோக்குகள் போன்ற வரலாற்று நிகழ்வுகளின் இறையியல் முக்கியத்துவம் பற்றிய சில முன்னோக்குகளை அறிந்துகொள்ளும்படி அப்போஸ்தலர் புத்தகத்தில் தெரிவிக்க வேண்டும் என்று லூக்கா விரும்பினார்.
முந்தைய பாடத்தில் நாம் பார்த்தது போல, லூக்கா உலகத்தையும் வரலாற்றையும் கிறிஸ்துவின் கர்த்தத்துவம் மற்றும் ராஜ்யத்தின் கண்ணாடி மூலம் பார்த்தார். பழைய ஏற்பாட்டு நம்பிக்கைகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் இயேசு மற்றும் சபையின் மூலம் நிறைவேற்றப்படுவதை அவர் கண்டார். மேலும், தெயோப்பிலு தனது ஆரம்பகால சபை நிகழ்வுகளின் பதிவை இந்த கண்ணாடி மூலம் பார்க்க வேண்டும் என்று லூக்கா விரும்பினார், மேலும் கிறிஸ்து எவ்வாறு தேவனுடைய ஆவியின் மூலம் கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்தை நிறுவினார் மற்றும் தொடர்ந்து கட்டியெழுப்பினார் என்பதையும் தெரியப்படுத்த லூக்கா விரும்பினார். ஆகவே, இன்று அப்போஸ்தலர் புத்தகத்தைப் படிக்கும்போது, லூக்கா உண்மை சம்பவங்களை மட்டும் பதிவு செய்யவில்லை என்பதை நாம் எப்போதும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மாறாக, அவர் சபைக்கு அடித்தளமாக இருந்த போதனைகளான பரிசுத்த ஆவியின் மூலம் கிறிஸ்துவின் தொடர்ச்சியான பணிக்கு நம்பகமான சாட்சி என்பதன் மீது கவனத்தை ஈர்த்தார்.

அதிகாரத்தின் மீது நம்பிக்கை

லூக்காவின் இரண்டு நோக்கங்களையும் மனதில் கொண்டு, அவரது
சொல்லாட்சிக் உத்தியின் இரண்டாவது அம்சமான “அதிகாரத்தின் மீது அவர் சார்ந்திருத்தல்’ என்பதை பரிசீலிக்க நாம் தயாராக இருக்கிறோம். லூக்கா தனது சொந்த அதிகாரத்தின் அடிப்படையில் பதிவுசெய்த வரலாற்று மற்றும் இறையியல் உண்மைகளை வலியுறுத்தவில்லை, மாறாக கிறிஸ்து மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் அதிகாரத்தின் அடிப்படையில் பதிவு செய்த உண்மைகளை வலியுறுத்தினார். இந்த வழியில், லூக்கா சுவிசேஷத்தின் உண்மையான சாட்சியாக பணியாற்றினார்.

-4-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

அப்போஸ்தலர் புத்தகத்தில் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம்
என்னவென்றால், கிறிஸ்துவின் முக்கிய சாட்சிகளாக பணியாற்றியவர்களின் வார்த்தைகள் மற்றும் செயல்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட காரியங்களின் அளவாகும். கிறிஸ்து பரலோகத்திற்குச் சென்றபோது, அவர் தம்முடைய அப்போஸ்தலர்களைத் தம்முடைய சாட்சிகளாகப் பெயரிட்டு, அவரைச் சார்ந்து, அவருடைய ராஜ்ய வேலையைத் தொடர அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர் அவ்வப்போது தீர்க்கதரிசிகளுக்கும் மற்ற முக்கிய சபைத் தலைவர்களுக்கும் தனது செய்தியை அறிவிக்க அதிகாரம் அளித்தார். லூக்கா தெயோப்பிலு மற்றும் பரந்த சபையை தனது முன்னோக்குகளைக் குறித்து அறிவுறுத்த முயன்றபோது, அவர் தனது சொந்த கண்ணோட்டங்களை விளக்குவதற்கும் அங்கீகரிக்கவும் ஆரம்பகால சபைத் தலைவர்களை, குறிப்பாக அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளிடம் திரும்ப திரும்ப சென்றார்.
அதிகாரத்தின் மீது லூக்காவின் நம்பிக்கையை இன்னும் விரிவாக ஆராய,
நாம் இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்துவோம். முதலாவதாக, தன் வார்த்தைகள் அதிகாரபூர்வமான வார்த்தைகள் என்று லூக்கா முறையிட்ட விதத்தை நாம் பரிசீலிப்போம். இரண்டாவதாக, அதிகாரபூர்வமான செயல்களைப் பற்றிய அவரது குறிப்புகளைப் பார்ப்போம். சபையில் அதிகாரம் செலுத்திய வார்த்தைகளுக்கு லூக்கா கொடுத்த முக்கியத்துவத்துடன் ஆரம்பிக்கலாம்.

வார்த்தைகள்

நம் முந்தைய பாடத்தில் நாம் குறிப்பிட்டது போல, லூக்கா ஒரு
அப்போஸ்தலன் அல்ல. உண்மையில், இயேசு பரலோகத்திற்கு போன பிறகு அவர் விசுவாசத்திற்குள் வந்திருக்கலாம். பவுலுடன் பயணம் செய்த போதும் பயணம் செய்யாத போதும், லூக்கா இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் ஊழியங்களை ஆராய்ந்து, கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரில் கண்ட சாட்சிகளின் சாட்சியத்தை பதிவு செய்தார்.
இப்போது, ஒரு வகையில், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் அவருடைய சாட்சிகள் ஆவார்கள். ஆனால், சபை ஸ்தாபிக்கப்பட்டபோது, இயேசு தம்முடைய தவறாத சாட்சிகளாக அப்போஸ்தலர்களை நியமித்தார். அவர் இல்லாத நேரத்தில் பூமியில் நிரந்தரமான அதிகாரபூர்வமான சாட்சிகளாக பணியாற்ற அவரால் நியமிக்கப்பட்டு அதிகாரம் பெற்றவர்கள் அவர்கள் மட்டுமே. இதற்கு அப்பால், தேவன் தீர்க்கதரிசிகளையும், லூக்கா போன்ற மற்ற அங்கீகரிக்கப்பட்ட சபைத் தலைவர்களையும் அவ்வப்போது அதிகாரபூர்வமாக சாட்சியளிக்க அழைத்தார்.
லூக்கா அதிகாரபூர்வமான வார்த்தைகளை முன்வைத்த மிக முக்கியமான வழி சொற்பொழிவுகளை பதிவு செய்ததாகும். திருச்சபையின் போதனைகளைப் பற்றி வெறுமனே கருத்து தெரிவிப்பதற்குப் பதிலாக, லூக்கா தொடர்ந்து விரிவான சொற்பொழிவுகளை பதிவுசெய்தார், தேவனின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிகள் அவருடைய வரலாற்றில் செயலில் உள்ள பாத்திரங்களாக தாங்களாகவே பேச அனுமதித்தார்.
உண்மையில், இந்த புத்தகத்தில் சுமார் முப்பது சதவிகிதம்
விவாதங்கள், உரையாடல்கள், தன்னுரைகள், பிரசங்கங்கள் மற்றும் பிற வகையான வாய்வழி விளக்கக்காட்சிகளைக் கொண்டவை. அப்போஸ்தலர்களின் சொற்பொழிவுகள் அதிக அதிகாரமுடையவை என்று லூக்கா கருதியதால், இது மற்ற பண்டைய கதைகளில் நாம் காண்பதை விட அதிக சதவிகிதமாகும். மொத்தத்தில், அப்போஸ்தலர்களில் சுமார் 24 சொற்பொழிவுகள் உள்ளன: பேதுருவிடமிருந்து எட்டு, பவுலிடமிருந்து ஒன்பது, ஸ்தேவானிடமிருந்து ஒன்று, யாக்கோபிடமிருந்து ஒன்று, மற்றும் வேறு சில. இந்த சொற்பொழிவுகளில் பெரும்பாலானவை அப்போஸ்தலர்களால் செய்யப்பட்டவை; மீதமுள்ளவை பெரும்பாலும் தீர்க்கதரிசிகள் மற்றும் முக்கிய சபைத் தலைவர்களால் செய்யப்பட்டவை. இது ஏன் முக்கியமானதாக இருக்கிறது? அப்போஸ்தலர் புத்தகத்தின்
உரைகள் ஆரம்பகால சபைத் தலைவர்கள் யார் என்பதையும், பல பிரச்சனைகளைப் பற்றி அவர்கள் என்ன நினைத்தார்கள் என்பதையும் நமக்குக் கூறுகின்றன. சீஷர்கள் கிறிஸ்துவுக்காக ஏன் துன்பப்படத் தயாராக இருந்தார்கள் என்பதை

-5-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

அவை நமக்குக் காட்டுகின்றன. அவர்கள் கிறிஸ்துவுக்கு அப்போஸ்தலர்கள்
செய்த சேவைக்கு சாட்சியாக இருக்கிறார்கள் மற்றும் அவருடைய ராஜ்யத்தை கட்டியெழுப்புவதற்கான அவர்களின் வழிமுறைகளை பதிவு செய்கிறார்கள். ஆரம்பகால சபையின் வரலாற்றில் லூக்காவின் முன்னோக்குகளையும் அவை அங்கீகரிக்கின்றன.
இப்போது, பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் பல விமர்சன அறிஞர்கள் இருந்துள்ளனர், அவர்கள் அப்போஸ்தலர் புத்தகத்தில் அவர் சேர்த்த உரைகளின் உண்மையான அறிக்கைகளை லூக்கா வழங்கியுள்ளார் என்பதை ஏற்கவில்லை. மேலும், சொற்பொழிவுகள் உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக இல்லாத வரலாற்றுக் கணக்குகளின் பண்டைய உலகில் உதாரணங்கள் உள்ளன என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.
ஆனால் பல விமர்சன மற்றும் சுவிசேஷ அறிஞர்கள் லூக்காவின் நாளுக்கு முன்னும் பின்னும் பல வரலாற்றாசிரியர்கள் தங்கள் வரலாற்றில் உள்ள உரைகள் உண்மையான உரைகளின் உண்மையான பிரதிநிதித்துவங்கள் என்பதை உறுதிப்படுத்த கடுமையாக உழைத்ததாக சுட்டிக்காட்டுகின்றனர். உண்மையில், அப்போஸ்தலருடைய நடபடிகளில் உள்ள உரைகளை நாம் இன்னும் உன்னிப்பாகப் பார்க்கும்போது, லூக்கா இந்த நம்பகமான வரலாற்றாசிரியர்களில் ஒருவர் என்பதற்கு உறுதியான ஆதாரங்களைக் காண்கிறோம், எனவே அவர் பதிவிட்ட உரைகள் உண்மையில் அதிகாரபூர்வமான அப்போஸ்தல போதனைகளைப் பிரதிபலிக்கின்றன.
லூக்கா பரிசுத்த ஆவியானவரால் தூண்டப்பட்டு தவறில்லாத மற்றும் அதிகாரபூர்வமான வரலாற்றை எழுதுவதற்கு அப்போஸ்தலர் புத்தகத்தில் உள்ள உரைகளின் பதிவுகளில் முதன்மையாக நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆயினும்கூட, அப்போஸ்தலரில் உள்ள உரைகள் உண்மையான சொற்பொழிவுகளின் துல்லியமான பிரதிநிதித்துவங்கள் என்பதை நாம் காணக்கூடிய குறைந்தது நான்கு வழிகள் உள்ளன.
முதலாவதாக, சொற்பொழிவுகள் அதற்கேற்ற பாணியைக் கொண்டுள்ளன.
அப்போஸ்தலர் புத்தகத்தின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடுகையில், அவை எளிமையான பாணியுடன் இயல்பானதாகத் தெரிகின்றன. அவைகளில் சில கடினமான, மெருகூட்டப்படாத கிரேக்கத்தைப் பயன்படுத்துகின்றன. லூக்கா பேச்சாளர்களின் பேச்சுக்களை செம்மைப்படுத்துவதையும் மாற்றியமைப்பதையும் காட்டிலும் உண்மையில் என்ன சொன்னார்கள் என்பதை எழுதுவதில் அதிக அக்கறை கொண்டிருந்தார் என்பதை இது காட்டுகிறது. இரண்டாவதாக, சொற்பொழிவுகள் அந்தந்த சூழல்களுக்கு நன்றாகப் பொருந்துகின்றன. ஒவ்வொரு பேச்சும் பேச்சாளர் மற்றும் பார்வையாளர்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, அப்போஸ்தலர் 4 இல், ஒரு ஊனமான மனிதனைக் குணப்படுத்திய பிறகு பேதுரு யூதத் தலைவர்களிடம் பேசினார். அவருடைய பேச்சு கிறிஸ்துவில் இருக்கிற இரட்சிப்பைப் பிரகடனப்படுத்தினாலும், பேதுரு தனது வார்த்தைகளுக்கு ஆதாரமாக குணப்படுத்துவதை நேரடியாக முறையிட்டார். மேலும், அவிசுவாசியான யூதத் தலைவர்கள் பேதுருவை மறுதலிக்க முடியவில்லை, ஏனென்றால் அவர்களே அவர் குணப்படுத்துவதைக் கண்டார்கள்.
இதேபோல், பவுலின் பேச்சுகள் அந்தந்த சூழல்களைப் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, அப்போஸ்தலர் 13 இல், பிசிதியாவில் இருக்கிற அந்தியோகியாவில் உள்ள யூதர்களிடமும் தேவ பயமுள்ளவர்களிடமும், அப்போஸ்தலர் 17 இல் உள்ள எப்பிக்கூரரிடமும் ஸ்தோயிக்கரிடமும் பேசுவதை விட அவர் மிகவும் வித்தியாசமாக பேசினார்.
மூன்றாவதாக, ஒவ்வொரு பேச்சும் அதன் பேச்சாளரின் தனித்துவத்தை பிரதிபலிக்கிறது. பொதுவான கருப்பொருள்கள் எதிர்பார்க்கப்பட வேண்டும் என்றாலும், ஒவ்வொரு பேச்சாளரும் சிறப்பியல்பு அம்சங்களைக் காட்டுகிறார்கள். உதாரணமாக, அப்போஸ்தலர் 20 இல் எபேசு சபை மூப்பர்களிடம் பவுல் பேசியதற்கு இணையாக பவுல் பேசிய பல இடங்கள் உள்ளன. இந்தக் கடிதங்களை எழுதியவர்களிடம் இருந்து நாம் எதிர்பார்க்கும் பேச்சு இதுவே. நான்காவதாக, சில இடங்களில், லூக்கா குறிப்பிட்ட சில உரைகளை சுருக்கி வெளிப்படையாகக் கூறினார். உதாரணமாக, அப்போஸ்தலர் 2:40 இல், பேதுருவும்

-6-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

“வேறு பல வார்த்தைகளை” பேசியதாக அவர் குறிப்பிட்டார். லூக்காவின் குறிக்கோள் பொதுவாக உண்மையான சொற்பொழிவுகள் அவற்றின் அசல் சூழல்களில் முழுமையாகப் பிரதிபலிப்பதாக இருந்தது என்று நம்புவதற்கு இது நம்மைத் தூண்ட வேண்டும்.
இவற்றிலும் வேறு பல வழிகளிலும், லூக்கா சரித்திர ரீதியாக உண்மையான
உரைகளை வழங்கினார் என்று நாம் உறுதியளிக்கலாம். அவர் தனது நோக்கங்களுக்கு ஏற்றவாறு அப்போஸ்தலர் புத்தகத்தில் உள்ள சொற்பொழிவுகளை உருவாக்கவோ அல்லது புனையவோ இல்லை. தனது சொந்த கருத்துக்கள் மற்றும் கதை விளக்கங்களின் அதிகாரம் அப்போஸ்தலர்களின் உண்மையான அதிகாரபூர்வமான சாட்சியின் மீது சார்ந்திருக்கும்படி பார்த்துக்கொண்டார். அதிகாரபூர்வமான வார்த்தைகளை பதிவு செய்வதோடு, அப்போஸ்தலர் புத்தகத்தின் மூலம் அவர் தெரிவித்த இறையியல் செய்தியை ஆதரிப்பதற்காக ஆரம்பகால சபையில் நிகழ்த்தப்பட்ட அதிகாரபூர்வமான செயல்களின் கணக்குகளையும் லூக்கா சார்ந்திருந்தார்.

கிரியைகள்

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கும் சில சமயங்களில் தீர்க்கதரிசிகள் மற்றும் ஆரம்பகால சபையில் உள்ள மற்ற முக்கிய தலைவர்களுக்கும் அவர்களின் சுவிசேஷ செய்தியை உறுதிப்படுத்தும் பல அற்புதமான வழிகளில் அதிகாரம் அளித்தார். குணப்படுத்துதல் மற்றும் மரித்தோரை எழுப்புதல் போன்ற ஆவிக்குரிய வரங்கள் மூலம், பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிகள் என்று சாட்சியளித்தார்.
அப்போஸ்தலர் 13:7-12 ஐக் கவனியுங்கள், அங்கு பவுலின் ஊழியம்
செர்கியுப் பவுல் அதிபருக்கு முன்பாக சரிபார்க்கப்பட்டது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:3-8 இல் உள்ள லூக்காவின் பதிவைக் கவனியுங்கள்:

அந்த அதிபதி பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து, அவர்களிடத்தில் தேவவசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான். மாயவித்தைக்காரன் என்று அர்த்தங்கொள்ளும் பேரையுடைய
அந்த எலிமா என்பவன் அதிபதியை விசுவாசத்தினின்று
திருப்பும்படி வகைதேடி, அவர்களோடு எதிர்த்துநின்றான். பிறகு.... அப்பொழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்தஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப்பார்த்து: ".... இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய்." உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல்
விழுந்தது; அவன் தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத்
தேடினான். அப்பொழுது அதிபதி சம்பவித்ததைக் கண்டு,
கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு,
விசுவாசித்தான் (அப் 13:7-12).

எலிமா சுவிசேஷத்தை தடுக்க முயன்றபோது, பரிசுத்த ஆவியானவர் பவுலை குருட்டுத்தன்மையால் தாக்குவதற்கு அவருக்கு அதிகாரம் அளித்தார். பவுலின் போதனைகளும் செயல்களும் அவருடைய சுவிசேஷம் உண்மை என்று அதிபரைத் தூண்டியது.
லூக்கா அதிகாரப்பூர்வமான வார்த்தைகளையும் செயல்களையும் பதிவுசெய்தார், அதனால் அவருடைய கணக்குகளின் உண்மைத்தன்மையை அவரது வாசகர்கள் நம்புவார்கள். அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய இயேசுவால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்பதையும், கிறிஸ்துவைச் சார்ந்து தேவனுடைய ராஜ்யத்தை அவர்கள் தொடர்ந்து கட்டியெழுப்பும்போது, எல்லா இடங்களிலும் தலைமுறைகளிலும் உள்ள திருச்சபை அவர்களின் சாட்சியைப் பின்பற்றக்

-7-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

கடமைப்பட்டுள்ளது என்பதையும் அவருடைய வாசகர்கள் பார்க்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.
லூக்காவில் கூறப்பட்ட நோக்கம் மற்றும் அதிகாரத்தின் மீதான
நம்பிக்கையை இப்போது நாம் பார்த்தோம், லூக்காவின் சொல்லாட்சி மூலோபாயத்தின் மூன்றாவது பரிமாணமான ‘அப்போஸ்தலர் புத்தகம் முழுவதும் லூக்கா பயன்படுத்திய கட்டமைப்பு முறைக்கு’ திரும்புவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

கட்டமைப்பு முறை

அப்போஸ்தலர் புத்தகம் பல கட்டமைப்பு வடிவங்களைக் காட்டுகிறது,
ஆனால் நேரத்திற்காக நாம் அதனுடைய கட்டமைப்பின் இரண்டு அம்சங்களில் கவனம் செலுத்துவோம். முதலில், மீண்டும் மீண்டும் சுருக்க அறிக்கைகளின் முக்கிய வடிவத்தை ஆராய்வோம். இரண்டாவதாக, அப்போஸ்தலருடைய நடபடிகளில் தோன்றும் சபை வளர்ச்சியின் மாதிரியைப் பார்ப்போம். சுருக்கமான அறிக்கைகளை லூக்கா பயன்படுத்திய விதத்தை முதலில் பார்க்கலாம்.

சுருக்க அறிக்கைகள்

வேத எழுத்தாளர்கள் தங்கள் இருப்பை பல்வேறு நிலைகளில் கதைகளின் வழியாகத் தெரியப்படுத்துகிறார்கள். சில நேரங்களில், எல்லா நடைமுறை நோக்கங்களுக்காகவும், அவர்கள் ஒரு கதையின் செயலுக்குப் பின்னால் தங்களை மறைத்துக்கொள்கிறார்கள். மற்ற நேரங்களில், அவர்கள் தங்கள் கணக்குகளில் என்ன நடக்கிறது என்பது குறித்து வெளிப்படையான கருத்துக்களை வெளியிட முன்வருகிறார்கள். இந்த பிந்தைய நுட்பத்தை நாம் ஆசிரியரின் கருத்துக்கள் எனப் பேசுகிறோம். அப்போஸ்தலர் முழுவதும் லூக்கா பல அதிகாரப்பூர்வ கருத்துக்களை தெரிவித்தார். அவர் பின்னணி தகவல்களை வழங்கினார், கதாபாத்திரங்களின் இருதயங்களின் நோக்கங்களை வெளிப்படுத்தினார், அமைப்புகளை விவரித்தார். அவருடைய செய்தி தெளிவாகவும் உண்மையாகவும் வழங்கப்படுவதை உறுதிசெய்ய அவர் இதைச் செய்தார். அவர் தனது புத்தகத்தில் நிகழ்வுகள் பற்றி அடிக்கடி கருத்துரைக்கும் வழிகளில் ஒன்று அறிக்கைகளை சுருக்கப்படுத்துவதாகும்.
அப்போஸ்தலர் புத்தகம் எருசலேமிலிருந்து சுவிசேஷம் வெளியே பரவியதை விவரிப்பதை பல வாசகர்கள் கவனித்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் சம்பவங்களை சுருக்கமாக கூறுவது லூக்காவின் வழக்கம். லூக்கா தனது வரலாற்றில் ஆறு காலகட்டங்களில் சுருக்கமான அறிக்கைகளை எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை ஆராய்வோம், அந்த ஆறு கட்டங்களாவன: எருசலேம், யூதேயா மற்றும் சமாரியாவில் சுவிசேஷத்தின் வெற்றி; சமாரியாவிலிருந்து சிரியாவின் அந்தியோகியா வரை; சீப்புரு, பிரிகியா மற்றும் கலாத்தியாவில்; ஆசியாவில், மக்கெதோனியா மற்றும் அகாயா; மற்றும் எருசலேமிலிருந்து ரோம் வரை.
உதாரணமாக, அப்போஸ்தலர் 5:42 ஐ எடுத்துக் கொள்ளுங்கள், அங்கு லூக்கா சபையின் வெற்றி மற்றும் செயல்பாட்டை பின்வரும் வார்த்தைகளுடன் சுருக்கமாகக் கூறினார்:

தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும்
இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று
பிரசங்கித்தார்கள் (அப் 5:42).

சுவிசேஷத்தின் வெற்றி மற்றும் திருச்சபையின் வளர்ச்சியின் வெற்றிகரமான நிலைகளை முன்னிலைப்படுத்த, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் முழுவதும் லூக்கா வழக்கமாக வழங்கிய சுருக்கமான அறிக்கையின் வகை இதுவாகும். அப்போஸ்தலர் 28:30-31 ல் உள்ள அவரது கருத்தைக் கவனியுங்கள்:

[பவுல்] தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே
இரண்டு வருஷமுழுதும் தங்கி, தன்னிடத்தில் வந்த

-8-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே
தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப்
பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய
விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான்
(அப் 28:30-31).

சுருக்கமான அறிக்கைகள் மூலம் லூக்கா தனது வரலாற்றின் சில அம்சங்கள் மீது கவனத்தை ஈர்த்ததை இப்போது நாம் பார்த்தோம், இந்த சுருக்க அறிக்கைகளுக்கு இடையில் வெளிப்படும் சபை வளர்ச்சியின் மாதிரியைப் பார்க்க வேண்டும்.

சபை வளர்ச்சி

சபையின் வளர்ச்சியை லூக்கா விவரித்தபோது, இரண்டு ஜோடி ஆற்றல்மிக்க சக்திகளை அவர் தொடர்ந்து குறிப்பிட்டார். ஒருபுறம், அவர் சபைக்குள் ஏற்பட்ட உள் வளர்ச்சி பற்றியும் பதற்றம் பற்றியும் எழுதினார். மறுபுறம், அவர் வெளிப்புற வளர்ச்சி மற்றும் சபைக்கு வெளியில் இருந்து வந்த எதிர்ப்பு பற்றி எழுதினார். இந்த பாடத்தில் இந்த மாதிரியை நாம் பின்னர் விளக்குவோம், எனவே இப்போது நாம் இதன் அர்த்தம் என்ன என்று பார்ப்போம். "உள் வளர்ச்சி" என்ற பதத்தின் மூலம், கிறிஸ்தவ சமூகத்திற்குள்
ஏற்பட்ட சுவிசேஷத்தின் நேர்மறையான விளைவுகளை நாம் குறிப்பிடுகிறோம். தனிநபர்கள் மற்றும் ஒட்டுமொத்த சபையின் ஆவிக்குரிய முதிர்ச்சியை மேம்படுத்தும் வகையில், இது ஒரு தரமான வளர்ச்சி என்று நாம் கூறலாம். "பதற்றம்" என்ற வார்த்தையின் மூலம், சபைக்குள் ஏற்பட்ட பிரச்சனைகள், கேள்விகள், சர்ச்சைகள் மற்றும் போராட்டங்களை நாம் அர்த்தப்படுத்துகிறோம். அப்போஸ்தலர் புத்தகத்தில், உள் வளர்ச்சிக்கும் பதற்றத்திற்கும் இடையே ஒரு பரஸ்பர உறவு இருப்பதை லூக்கா தொடர்ந்து நிரூபித்தார். உள் வளர்ச்சி பதற்றத்திற்கு வழிவகுத்தது, மற்றும் பதற்றம் உள் வளர்ச்சிக்கு வழிவகுத்தது.
லூக்காவின் சபை வளர்ச்சியின் கட்டமைப்பில் உள்ள இரண்டாவது ஜோடி கூறுகள் வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பு ஆகும். "வெளிப்புற வளர்ச்சி" என்பது புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலம் சபை எண்ணிக்கையில் அதிகரித்தது என்பதை குறிக்கிறோம். இந்த வளர்ச்சி எண்ணிக்கையின் அடிப்படையிலானது. "எதிர்ப்பு" என்ற வார்த்தையின் மூலம், அவிசுவாசிகள் சுவிசேஷத்திற்கு எதிர்மறையாக நடந்துகொள்வதால், சபைக்கும் அவிசுவாசி உலகிற்கும் இடையே அடிக்கடி மோதல்கள் எழுந்ததைக் குறிப்பிடுகிறோம். இந்த புத்தகத்தில் இந்த இரண்டு கருத்துக்களுக்கும் இடையே ஒரு பரஸ்பர உறவு உள்ளது. வெளிப்புற வளர்ச்சி சில நேரங்களில் எதிர்ப்புக்கு வழிவகுத்தது, மற்றும் எதிர்ப்பு சில நேரங்களில் வெளிப்புற வளர்ச்சிக்கும் வழிவகுத்தது.
மேலும், இந்த இரண்டு ஜோடி கூறுகளுக்கும் இடையே ஒரு பரஸ்பர உறவு
இருப்பதை லூக்கா அடிக்கடி நிரூபித்தார், ஒருபுறம் உள் வளர்ச்சி மற்றும் பதற்றம், மறுபுறம் வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பு. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உள் வளர்ச்சியும் பதற்றமும் வெளிப்புற வளர்ச்சியையும் எதிர்ப்பையும் தருவதாகவும், வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பு உள் வளர்ச்சி மற்றும் பதற்றத்தை ஏற்படுத்துவதாகவும் லூக்கா தொடர்ந்து சுட்டிக்காட்டினார். இந்த பாடத்தில் நாம் பின்னர் பார்க்கவிருப்பதைப் போல், சபை வளர்ச்சிக்கான இந்த முறை இந்த புத்தகத்தில் அடிக்கடி தோன்றும், இது புத்தகத்திற்கான ஒரு வகையான கருத்தியல் கட்டமைப்பை அல்லது உள் கூட்டை உருவாக்குகிறது.
லூக்கா தனது புத்தகம் முழுவதும் செய்த சுருக்கங்கள் அப்போஸ்தலர் புத்தகத்தின் ஒவ்வொரு முக்கிய பகுதியும் ஆரம்பகால திருச்சபையின் சாட்சி மூலம் பரவிய சுவிசேஷத்தின் வளர்ச்சியை சித்தரிக்கிறது என்று விளக்குகின்றன. தெயோப்பிலு மற்றும் லூக்காவின் புத்தகத்தைப் படித்த மற்றவர்களின் மீது இந்தக் கருத்துக்கள் ஏற்படுத்தியிருக்கும் விளைவை

-9-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

கற்பனை செய்து பாருங்கள். எவ்வளவு பெரிய பதற்றமாக இருந்தாலும், எவ்வளவு பயங்கரமான எதிர்ப்பாக இருந்தாலும், தேவன் தம்முடைய சபையின் உள் மற்றும் வெளிப்புற வளர்ச்சிக்காக சுவிசேஷத்தின் மூலம் எப்பொழுதும்
பாடுபடுகிறார் என்று எல்லா இடங்களிலும் உள்ள விசுவாசிகளை அவைகள் ஊக்குவித்திருக்கும். இந்தக் கண்ணோட்டத்தில் எல்லா வரலாற்றையும் படிக்க ஆரம்பகால கிறிஸ்தவர்களை அவைகள் தூண்டியிருக்கும். அவர்கள் தங்கள் தேவனுக்கும் இரட்சகருக்கும் உண்மையுள்ள சாட்சிகளாக இருந்தால், உள் மற்றும் வெளிப்புற பிரச்சனைகள் இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் நாளிலும் சுவிசேஷத்தின் வளர்ச்சியைக் காண்பார்கள் என்று அவைகள் உறுதியளித்திருக்கும்.

உள்ளடக்கம்

லூக்காவின் சொல்லாட்சி உத்தியின் சில மைய பரிமாணங்களை மனதில்
கொண்டு, நாம் இப்போது நமது இரண்டாவது தலைப்பான அப்போஸ்தலர் புத்தகத்தின் உள்ளடக்கத்திற்கு திரும்புவோம். இந்தப் புத்தகத்தின் உள்ளடக்கத்தை சுருக்கமாகச் சொல்ல பல வழிகள் இருந்தாலும், சபையின் வளர்ச்சியை பூமியில் தேவனுடைய ராஜ்யமாக லூக்கா விவரித்த விதத்தில் கவனம் செலுத்துவோம். லூக்கா சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள், இயேசு எவ்வாறு சுவிசேஷத்தை அறிவிப்பதன் மூலம் தேவனுடைய பூமிக்குரிய ராஜ்யத்தை கொண்டு வந்து கட்டத் தொடங்கினார் என்பதை விளக்குகின்றன. லூக்கா தனது சுவிசேஷத்தில், இயேசு தனது பூமிக்குரிய ஊழியத்தின் போது ராஜ்யத்திற்கு அமைத்த அடித்தளத்தை விவரித்தார். அப்போஸ்தலர்களும் சபையும் அவருடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்பும் வேலையைத் தொடர இயேசு எவ்வாறு பரிசுத்த ஆவியை ஊற்றினார் என்பதை அப்போஸ்தலர் புத்தகத்தில் லூக்கா விவரித்தார். இந்த வழியில், தேவனுடைய ராஜ்யம் என்பது லூக்காவின் படைப்புகளின் இரண்டு தொகுதிகளின் மேலோட்டமான கதையாகும். எனவே, அப்போஸ்தலருடைய நடபடிகளின் உள்ளடக்கத்தை நாம் ஆராயும்போது, அப்போஸ்தலர்களின் தலைமையில் ராஜ்யம் தொடர்ந்து விரிவடையும் விதத்தில் சிறப்பு கவனம் செலுத்துவோம். அப்போஸ்தலர் 1:8 இல் இயேசு அப்போஸ்தலர்களை நியமித்தபோது,
சாட்சிகளாக பணியாற்றும்படி அவர்களுக்கு அறிவுறுத்தினார், முதலில் எருசலேமில் நற்செய்தியை அறிவித்து, பின்னர் உலகம் முழுவதும் பரப்பினார்கள். அப்போஸ்தலர்களுக்கு அப்போஸ்தலர் 1:8 இல் இயேசு சொன்ன வார்த்தைகளை மீண்டும் ஒருமுறை கவனியுங்கள்:

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள்
பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும்,
சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப் 1:8).

இங்கே இயேசு சபையின் சுவிசேஷ சாட்சிக்காக ஒரு புவியியல் உத்தியை வகுத்தார். பரிசுத்த ஆவியால் அதிகாரம் பெற்ற அப்போஸ்தலர்கள் எருசலேமில் சாட்சி கொடுக்க ஆரம்பித்து, பின்னர் யூதேயா மற்றும் சமாரியாவுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும், இறுதியாக பூமியின் கடைசி வரை, அவர்கள் சென்ற இடமெல்லாம் ராஜ்யத்தை விரிவுபடுத்த வேண்டும்.
புவியியல் சாட்சி விரிவாக்கத்திற்கான இயேசுவின் அழைப்பைச் சுற்றி லூக்கா அப்போஸ்தலர் புத்தகத்தை அமைத்திருப்பதை பல அறிஞர்கள் கவனித்திருக்கிறார்கள். மேலும் அவரது பணியை ஆய்வு செய்யும் போது இதே முறையை பின்பற்றுவோம். எருசலேமில் சுவிசேஷத்தின் வளர்ச்சியை அப்போஸ்தலர் 1:1-8:4 இல் லூக்கா விவரித்த விதத்தை முதலில் பார்ப்போம். இரண்டாவதாக, நாம் 8:5-9:31 இல் யூதேயா மற்றும் சமாரியாவில் ராஜ்யம்

-10-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வளர்ச்சியடைந்ததைப் பற்றிப் பார்ப்போம். மூன்றாவதாக, சபை 9:32-28:31 இல் பூமியின் முனைகளுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு சென்ற விதத்தில் கவனம் செலுத்துவோம். இந்த மூன்றாவது பகுதி மிகவும் நீளமாக இருப்பதால், நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள லூக்காவின் சுருக்கமான அறிக்கைகளால் பரிந்துரைக்கப்பட்ட வளர்ச்சியின் நான்கு நிலைகளை மையமாகக் கொண்டு இதில் சிறப்பு கவனம் செலுத்துவோம்: முதலில், 9:32-12:25 இல் பெனிக்கே, சீப்புரு மற்றும் அந்தியோகியா; இரண்டாவது, 13:1–15:35 இல் சீப்புரு, பிரிகியா மற்றும் கலாத்தியா; மூன்றாவது, 15:36–21:16 இல்ஆசியா, மக்கெதோனியா மற்றும் அகாயா; மற்றும் நான்காவது, 21:17-28:31 இல் ரோம் வரை.
நாம் முன்பு விவரித்த உள் வளர்ச்சி மற்றும் பதற்றம் மற்றும்
வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பு ஆகியவற்றின் வடிவங்களில் கவனம் செலுத்துவதன் மூலம், இந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றையும் இன்னும் விரிவாகப் பார்ப்போம். அப்போஸ்தலர்களின் சுவிசேஷ சாட்சியின் மூலம் எருசலேமில் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட விதத்தில் அப்போஸ்தலர் 1:1-8:4 இல் ஆரம்பிக்கலாம்.

எருசலேம்

எருசலேம் பண்டைய இஸ்ரவேலின் தலைநகரம் ஆகும். மற்றும் பழைய
ஏற்பாட்டில் தேவனின் சிறப்பு தேசம் ஆகும். எருசலேம் லூக்காவின் கணக்கின் தொடக்கப் புள்ளியாக இருந்தது, ஏனென்றால் பழைய ஏற்பாடு முழுவதும் தேவனுடைய ராஜ்யத்தில் அது முக்கிய பங்கு வகித்தது, மேலும் இயேசுவின் ஊழியத்திலும் முக்கிய பங்கு வகித்தது. மேலும், லூக்கா அப்போஸ்தலர் புத்தகத்தில் பல இடங்களில் எருசலேமில் நடந்த நிகழ்வுகளைப் பற்றி எழுதினார், புதிய நாடுகளுக்கு நற்செய்தியைப் பரப்புவதில் அப்போஸ்தலர்களின் பணி இந்த சிறப்பு நகரத்தில் வேரூன்றியிருந்தது என்பதைக் காட்டுகிறது.
லூக்கா ராஜ்யத்தின் வளர்ச்சியை எருசலேமில் உள்ள சுவிசேஷத்தின்
மூலம் நான்கு முக்கிய கதைகளில் அறிக்கை செய்தார்: முதலாவதாக, அப்போஸ்தலர் 1-2 இல் ஆவியின் எதிர்பார்ப்பு மற்றும் ஆவி ஊற்றப்படுதல்; இரண்டாவது, பேதுருவின் ஆலயப் பிரசங்கம் மற்றும் அப்போஸ்தலர் 3-4 இல் ஏற்பட்ட உபத்திரவம்; மூன்றாவதாக, அனனியா மற்றும் சப்பீராளின் கதை மற்றும் அப்போஸ்தலர் 5 இல் ஏற்பட்ட துன்புறுத்தல்; மற்றும் நான்காவது, உதவியாளர்களின் தேர்வு மற்றும் அப்போஸ்தலர் 6:1–8:4 இல் உள்ள உபத்திரவம். விளக்கத்தின் மூலம், எருசலேமில் நடந்த பல நன்கு அறியப்பட்ட நிகழ்வுகளில் உள் வளர்ச்சி தோன்றுகிறது, அவை:
• அப்போஸ்தலர் 1 இல் அப்போஸ்தலர்கள் சுவிசேஷ வேலைக்காக அனுப்பப்படுதல்
• அப்போஸ்தலர் 2 இல் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்படுதல்
• எருசலேமில் நடந்த அற்புதங்களின் அனுபவம், குறிப்பாக அப்போஸ்தலர் 3, 4 மற்றும் 5 இல் பேதுருவால் நிகழ்ந்த அற்புதங்கள்
அதே நேரத்தில், கிறிஸ்தவ சமூகத்திற்குள் பல வழிகளில் இருந்த பதட்டங்களையும் நாம் காண்கிறோம்:
• அப்போஸ்தலர் 1 இல் பன்னிரண்டாவது அப்போஸ்தலன் யார் என்ற கேள்வி
• அப்போஸ்தலர் 5 இல் அவர்கள் நன்கொடையாக வழங்கிய பணத்தைப்
பற்றி அனனியா மற்றும் சப்பீராளின் பொய்; மற்றும்
• அப்போஸ்தலர் 6 இல் கிரேக்க விதவைகளுக்கு எதிரான பாகுபாடு இதற்கு அப்பால், எருசலேமில் சுவிசேஷ சாட்சியைக் குறித்த லூக்காவின் பதிவும் வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பின் மாதிரியைப் பின்பற்றுகிறது. உதாரணத்திற்கு:

-11-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

• பெந்தெகொஸ்தே நாளில், அப்போஸ்தலர் 2 இல் சுமார் 3,000 பேர்
சபையில் சேர்க்கப்பட்டனர்.
• யோவான் மற்றும் பேதுரு அப்போஸ்தலர் 4 இல் சிறையில்
அடைக்கப்பட்டபோது சபையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார்
5,000 ஆக உயர்ந்தது.
• அப்போஸ்தலர் 6 இல் பல யூத ஆசாரியர்கள் சபையில்
சேர்க்கப்பட்டனர்
அப்படியிருந்தும், நாம் ஏற்கனவே பரிந்துரைத்துள்ளபடி, இந்த
வெளிப்புற வளர்ச்சி பெரும்பாலும் விசுவாசமற்ற உலகத்தின் வலுவான எதிர்ப்புடன் அமைக்கப்பட்டது, அதாவது:
• அப்போஸ்தலர் 5 இல் பேதுரு மற்றும் யோவான் கைது செய்யப்பட்டு
அடிக்கப்படுதல்.
• அப்போஸ்தலர் 7 ல் ஸ்தேவான் இரத்த சாட்சியாக மரித்தல்; மற்றும்
• அப்போஸ்தலர் 8 இல் எருசலேமிலிருந்து துன்புறுத்தப்படுவதன்
மூலம் சபை சிதறுகிறது.
எருசலேமில் வளர்ந்து வரும் சபையை ஊக்கப்படுத்த உள் பதட்டத்தையும் வெளிப்புற எதிர்ப்பையும் நாம் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியின் வல்லமையின் கீழ், உண்மை அதற்கு நேர்மாறாக இருந்தது. சுவிசேஷ சாட்சி பெரும் பலத்துடன் தொடர்ந்து முன்னேறியது, இறுதியில் அதன் முன்னேற்றம் தடையின்றி நடந்தது.

யூதேயா மற்றும் சமாரியா

அப்போஸ்தலருடைய நடபடிகளின் இரண்டாவது பெரிய பிரிவு, அப்போஸ்தலர் 8:5–9:31 இல் யூதேயா மற்றும் சமாரியாவில் உள்ள சபையின் சுவிசேஷ சாட்சியின் மீது கவனம் செலுத்துகிறது. யூதேயா மற்றும் சமாரியாவின் பகுதிகள் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளுக்குச் சமமானவை. இயேசு பரமேறுவதற்கு முன் இந்தப் பகுதிகளில் ஊழியம் செய்திருந்தார். யூதேயா மற்றும் சமாரியாவில் லூக்காவின் கவனத்தை இரண்டு முக்கிய கதைகளாகப் பிரிக்கலாம், அவையாவன: அப்போஸ்தலர் 8:5-40 இல் பிலிப்புவின் ஊழியம் மற்றும் அப்போஸ்தலர் 9:1-31 இல் பவுலின் மனமாற்றம்.
இந்த கதைகள் சபையின் உள் வளர்ச்சியில் கவனத்தை ஈர்க்கின்றன.
உதாரணமாக, அப்போஸ்தலர் 8 இல் புதிய விசுவாசிகள் தொடர்ந்து பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டதால் உள் வளர்ச்சி தொடர்ந்தது, மேலும் அப்போஸ்தலர் 9 இல் சவுல் ஒரு அப்போஸ்தலன் ஆக்கப்பட்டார்.
இந்த நிகழ்வுகடன் சேர்ந்து சபைக்குள் பதற்றம் கட்டப்பட்டது.
உதாரணமாக, சில விசுவாசிகள் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெறாததால், அப்போஸ்தலர் 8-ல் கேள்விகள் எழுப்பப்பட்டன. சீமோன் என்ற மந்திரவாதி அப்போஸ்தலர்களிடமிருந்து அப்போஸ்தலர் 8 இல் பரிசுத்த ஆவியின் வல்லமையை வாங்க முயன்றான்.
மறுபுறம், வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பின் முறையும் தொடர்ந்தது. உதாரணமாக, அப்போஸ்தலர் 8 இல் பிலிப்புவின் சுவிசேஷ ஊழியத்தின் மூலம் பல மனமாற்றம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அப்போஸ்தலர் 9 இல் பவுலின் மனமாற்றம் போன்ற நிகழ்வுகளின் மூலம் யூதேயா மற்றும் சமாரியாவில் சபை தொடர்ந்து எண்ணிக்கையில் வளர்ந்தது.
அப்படியிருந்தும், அவிசுவாசிகளின் எதிர்ப்பு இல்லாமல் இந்த
வளர்ச்சி ஏற்படவில்லை. உதாரணமாக, அப்போஸ்தலர் 9 இல் சவுல் தனது மனமாற்றத்திற்கு முன்பு விசுவாசிகளைத் துன்புறுத்தினார், மேலும் சில யூதர்கள் அப்போஸ்தலர் 9 இல் சவுலைக் கொலை செய்ய முயன்றனர்.
மீண்டும், உள் பதட்டமும் வெளிப்புற எதிர்ப்பும் இறுதியில் சபையைத் தடுக்கத் தவறிவிட்டன. மாறாக, பரிசுத்த ஆவியானவர் இந்த சவால்களைப்

-12-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பயன்படுத்தி சபைக்கு மேலும் முதிர்ச்சியையும் எண்ணியல் வளர்ச்சியையும் கொண்டு வந்தார்.

பூமியின் கடைசி பரியந்தம்

அப்போஸ்தலர்களின் மூன்றாவது பெரிய பிரிவு, அந்த நாளில்
அறியப்பட்டபடி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் எல்லைகளுக்கு அப்பால், பூமியின் கடைசி வரை சுவிசேஷம் எவ்வாறு விரிவடைந்தது என்பதை விவரிக்கிறது. நாம் குறிப்பிட்டுள்ளபடி, 9:32-12:25 இல் பெனிக்கே, சீப்புரு மற்றும் அந்தியோகியாவில் சுவிசேஷத்தின் முன்னேற்றம் தொடங்கி, இந்த பகுதியை இன்னும் விரிவாகப் பார்ப்போம்.

பெனிக்கே, சீப்புரு மற்றும் அந்தியோகியா

இந்த பகுதி யூதேயா மற்றும் சமாரியாவிற்கு அப்பால் சுவிசேஷத்தின் முதல் குறிப்பிடத்தக்க பரவலைப் பற்றியது, ஏனெனில் இது சிரியாவில் உள்ள பெனிக்கே, சீப்புரு மற்றும் அந்தியோகியாவின் அருகிலுள்ள புறஜாதி நாடுகளுக்கு விரிவடைந்தது. அப்போஸ்தலர் புத்தகத்தின் இந்தப் பகுதியில், அப்போஸ்தலர் 9:32-43-ல் லித்தாவிலும் யோப்பாவிலும் பேதுருவின் ஊழியம், 10:1-11:18-ல் செசரியாவில் புறஜாதியான கொர்நேலியுவுக்கு பேதுருவின் ஊழியம், 11:19-30 இல் சிரியாவின் அந்தியோகியாவுக்கு நற்செய்தி விரிவடைந்தது, மற்றும் 12:1-25 இல் எருசலேம் சிறையில் இருந்து பேதுருவின் அற்புதமான விடுதலையும் உள்ளது.
உள் வளர்ச்சியும் பதற்றமும் இங்கும் தொடர்ந்ததில் ஆச்சரியமில்லை.
உள் வளர்ச்சிக்கு பல உதாரணங்களை லூக்கா பதிவு செய்தார். உதாரணமாக, அப்போஸ்தலர் 10 இல் புறஜாதிகள் சபைக்குள் கொண்டு வரப்பட்டனர், மேலும் அப்போஸ்தலர் 12 இல் சிறையிலிருந்து பேதுருவின் அற்புதமான விடுதலையால் சபை ஊக்குவிக்கப்பட்டது.
நிச்சயமாக, அது தொடர்பான பதட்டங்களும் இருந்தன. எடுத்துக்காட்டாக,
பல யூதர்களும் அப்போஸ்தலர் 11 ல் உள்ள சபையில் புறஜாதியார்களை ஐக்கியப்படுத்த தயங்கினார்கள், மேலும் பலர் அப்போஸ்தலர் 11 இல் உள்ள பழைய ஏற்பாட்டு உணவுக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதை எதிர்த்தனர்.
இந்த பகுதியிலும், லூக்கா வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பின் மாதிரியை வலியுறுத்தினார். உதாரணமாக, அப்போஸ்தலர் 10 இல் கொர்நேலியு மற்றும் பல புறஜாதிகளின் மனமாற்றம் மற்றும் அப்போஸ்தலர் 11 இல் பர்னபா மற்றும் அந்தியோகியாவில் உள்ள மற்றவர்களின் வெற்றிகரமான சுவிசேஷ ஊழியத்தின் மூலம் நிகழ்ந்த வெளிப்புற வளர்ச்சியைப் பற்றி அவர் எழுதினார்.
ஆனால் இந்த வளர்ச்சி எதிர்ப்பு இல்லாமல் இல்லை. இந்த
உபத்திரவத்தில் அப்போஸ்தலர் 12 இல் யாக்கோபின் மரணம் மற்றும் அப்போஸ்தலர் 12 இல் பேதுருவின் சிறைவாசம் ஆகியவை அடங்கும்.
ஆனால் பதற்றம் மற்றும் எதிர்ப்பு இருந்தபோதிலும், சுவிசேஷ சாட்சி இறுதியில் தடைபடவில்லை. பரிசுத்த ஆவியானவர் சபையின் சுவிசேஷம் மற்றும் சீஷத்துவத்தை தொடர்ந்து ஆசீர்வதித்தார். அவர் இனப் பிளவுகளையும் துன்புறுத்தலையும் முறியடித்தார், ஒரு அற்புதமான வழியில் பேதுருவை சிறையிலிருந்து விடுவித்தார். அதன் பாதையில் என்ன தடைகள் வீசப்பட்டாலும், சுவிசேஷம் தொடர்ந்து முன்னேறிச் சென்றது.

சீப்புரு, பிரிகியா மற்றும் கலாத்தியா

அப்போஸ்தலர் 13:1–15:35 இல், லூக்கா தனது நான்காவது முக்கிய
பகுதியான சீப்புரு, பிரிகியா மற்றும் கலாத்தியாவில் சுவிசேஷம் பரவுதல் என்பதற்கு திரும்பினார். இந்த பிரிவில், சுவிசேஷம் எருசலேம், யூதேயா மற்றும் சமாரியாவிலிருந்து மேலும் நகர்ந்து, ஆசியா மைனரின் கிழக்குப் பகுதிகளுக்கு நீண்டுள்ளது. அப்போஸ்தலருடைய நடபடிகளின் இந்த பிரிவு

-13-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

இரண்டு முக்கிய பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது: பவுலின் முதல் மிஷனரி பயணம் அப்போஸ்தலர் 13:1–14:28 இல் ஆகும், மற்றும் அப்போஸ்தலர் 15:1-35 இல் எருசலேமில் நடந்த சங்கத்தைப் பற்றிய காரியங்கள் உள்ளன.
அவரது உத்திக்கு இணங்க, லூக்கா இந்த பகுதியிலும் உள் வளர்ச்சி
மற்றும் பதற்றத்தின் வடிவத்தை பிரதிபலித்தார். அப்போஸ்தலர் 14 இல் கலாத்தியாவில் உள்ள சபைகளை பவுல் பலப்படுத்துவது மற்றும் அப்போஸ்தலர் 15 இல் கிறிஸ்துவுக்கு மாறிய புறஜாதிகளை விருத்தசேதனம் செய்யக் கோராத எருசலேம் சங்கத்தின் முடிவு போன்றவற்றின் மூலம் உள் வளர்ச்சியை அவர் சுட்டிக்காட்டினார்.
லூக்கா இந்த பகுதியில் உள் பதற்றத்தையும் குறிப்பிட்டார்,
குறிப்பாக அவர் புறஜாதியாக மாறியவர்கள் தொடர்பான நடைமுறை சிக்கல்களைப் பற்றி எழுதினார். அப்போஸ்தலர் 15 இல் விருத்தசேதனம் மற்றும் பாரம்பரிய யூத உணவின் கடுமைகள் குறித்து யூத மற்றும் புறஜாதி விசுவாசிகளுக்கு இடையே பதற்றம் ஏற்பட்டது.
வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பைப் பொறுத்தவரை, அப்போஸ்தலர்
14 இல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, பவுலின் முதல் மிஷனரி பயணத்தால் உருவாக்கப்பட்ட எண்ணியல் வளர்ச்சி போன்ற பல விஷயங்களை லூக்கா குறிப்பிட்டார். ஆனால் முன்பு போலவே இந்த வளர்ச்சியும் கடும் எதிர்ப்புடன் இருந்தது. உதாரணமாக, பவுலும் பர்னபாவும் யூத அவிசுவாசிகளால், குறிப்பாக லீஸ்திரா, இக்கோனியா மற்றும் அந்தியோகியாவில், அப்போஸ்தலர் 14-ல் பலமுறை நிராகரிக்கப்பட்டனர். அப்படியிருந்தும், பரிசுத்த ஆவியானவர் சபையை முன்னோக்கி நகர்த்தி, தம்முடைய மக்களின் பாதையில் உள்ள ஒவ்வொரு தடைகளையும் கடந்து செல்ல சபைக்கு உதவினார். தடுக்க முடியாத சுவிசேஷம் தேவனின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொண்டே இருந்தது.

ஆசியா, மக்கெதோனியா மற்றும் அகாயா

அப்போஸ்தலரின் ஐந்தாவது பெரிய பிரிவு 15:36–21:16 வரை இயங்குகிறது, அங்கு சுவிசேஷ சாட்சி ரோம மாகாணங்களான ஆசியா, மக்கெதோனியா மற்றும் அகாயா வரை நீட்டிக்கப்பட்டது. அப்போஸ்தலருடைய நடபடிகளின் இந்தப் பகுதி, பவுலின் இரண்டாவது மற்றும் மூன்றாவது மிஷனரி பயணங்களில் கவனம் செலுத்துகிறது, அந்த நேரத்தில் பவுல் கிழக்கு ஆசியா மைனர் வழியாக பயணம் செய்தார், ஆனால் அவர் மேற்கு ஆசியா மைனரில் உள்ள ஆசியா மாகாணத்திற்கும், ஏஜியன் கடல் வழியாக பல நகரங்களுக்கும் சென்றார். மேலும் நவீன கிரேக்க நாட்டில் மக்கெதோனியா மற்றும் அகாயாவில் உள்ள பல நகரங்களுக்கும் சென்றார்.
பவுலின் இரண்டாவது மிஷனரி பயணம் அப்போஸ்தலர் 15:36-18:22 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது, மேலும் அவரது மூன்றாவது மிஷனரி பயணம் 18:23-21:16 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்போது நன்கு தெரிந்திருக்க வேண்டிய வடிவத்தில், இந்த அதிகாரங்கள் சபையின் உள் வளர்ச்சிக்கும் பதற்றத்திற்கும் இடையிலான உறவை வலியுறுத்துகின்றன. அப்போஸ்தலர் 18 இல் ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லா அப்பொல்லோவுக்கு அறிவுரை வழங்கியது, எபேசுவின் ஜெப ஆலயங்களில் பவுல் போதித்தது மற்றும் அப்போஸ்தலர் 19 இல் திறன்னு என்கிற வித்தியாசாலையில் பவுலின் நீட்டிக்கப்பட்ட போதனைகள் போன்றவை சபையின் உள் வளர்ச்சிக்கான பல எடுத்துக்காட்டுகள் ஆகும். நிச்சயமாக, இந்த உள் வளர்ச்சியுடன் அதிக பதற்றமும் இருந்தது. உதாரணமாக, பவுலும் பர்னபாவும் மாற்குவைக் குறித்து வாதிட்டு, அப்போஸ்தலர் 15-ல் பிரிந்தனர், மேலும் அப்போஸ்தலர் 20-ல் தீய நோக்கங்களைக் கொண்ட சபைத் தலைவர்களுக்கு எதிராகப் பாதுகாப்பாக இருக்கும்படி பவுல் சபையை எச்சரித்தார்.
வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பைப் பற்றியும் நாம்
படிக்கிறோம். எடுத்துக்காட்டாக, அப்போஸ்தலர் 15-21 இல், பவுல் தனது இரண்டாவது மற்றும் மூன்றாவது மிஷனரி பயணத்தின் போது பல மனமாற்றம் அடைந்தவர்களிடமும், அவர் ஸ்தாபித்த சபைகளிலும் வெளிப்புற வளர்ச்சியைக்

-14-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

[illegible]. [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible], [illegible] 17 [illegible] 20 [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

[illegible]

[illegible], [illegible] [illegible] [illegible] [illegible] 21:17-28:31 [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]: [illegible] 21:17–23:11 [illegible] [illegible] [illegible], 23:12–26:32 [illegible] [illegible] [illegible], 27:1–28:14 [illegible] [illegible] [illegible] [illegible], [illegible], 28: 15-31 [illegible] [illegible] [illegible].

[illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] 21 [illegible] [illegible] [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] 22 [illegible].

[illegible] [illegible] 21-[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] 21-[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

நவீன பிரயோகம்

இப்போது நாம் சொல்லாட்சி உத்தி மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகளின் உள்ளடக்கத்தை ஆராய்ந்துவிட்டோம், இப்போது நாம் மூன்றாவது தலைப்பான நவீன பிரயோகத்தை நோக்கிய படிகளுக்கு வருவோம். அப்போஸ்தலருடைய நடபடிகளின் உண்மைகளை நம்முடைய நாளில் பயன்படுத்தும்போது கருத்தில் கொள்ள வேண்டிய
சில முக்கிய பிரச்சனைகள் யாவை? இந்த தலைப்பை ஆராய, முதலில் அப்போஸ்தலருடைய நடபடிகளின் இலக்கியத் தன்மையில் கவனம் செலுத்துவோம், அதன் சில முக்கிய பண்புகளைக் குறிப்பிடுவோம். இரண்டாவதாக, அவருடைய புத்தகத்தின் நவீன பிரயோகத்தைப் பாதிக்கும் முதல் நூற்றாண்டுக்கும் நம் காலத்திற்கும் இடையே உள்ள சில தொடர்ச்சியின்மைகளைப் பற்றி பேசுவோம். மூன்றாவதாக, முதல் நூற்றாண்டிற்கும் நவீன காலத்திற்கும் இடையில் இருக்கும் சில முக்கியமான தொடர்ச்சிகளை உறுதிப்படுத்துவோம், அவை அப்போஸ்தலருடைய நடபடிகளின் அசல் அர்த்தத்தை நம் சொந்த வாழ்க்கையுடன் தொடர்புபடுத்த உதவுகின்றன. இந்தப் புத்தகத்தின் இலக்கியத் தன்மையை முதலில் ஆரம்பிக்கலாம்.

இலக்கிய தன்மை

வெவ்வேறு வகையான இலக்கியங்கள் தங்கள் கருத்துக்களை வெவ்வேறு
வழிகளில் தெரிவிக்கின்றன. உதாரணமாக, வேதத்தில் பல வகையான இலக்கியங்களைக் காண்கிறோம். வரலாற்றுக் கதைகள், கவிதைகள், உரைகள், உவமைகள், பழமொழிகள், பிரமாணம் போன்றவை உள்ளன. இந்த வகை இலக்கியங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வழிகளில் தொடர்பு கொள்கின்றன. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை பொறுப்புள்ள விதத்தில் புரிந்து கொள்ள வேண்டுமென நாம் நம்பினால், அது எந்த வகையான இலக்கியம் என்றும் இந்த வகையான இலக்கியம் அதன் கருத்துக்களை தெரிவிக்கும் வழிகளையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இலக்கியக் கண்ணோட்டத்தில் இந்த புத்தகத்தைப் பற்றி நாம்
சொல்லக்கூடிய பல விஷயங்கள் உள்ளன, ஆனால் அதன் மூன்று முக்கிய பண்புகளை முன்னிலைப்படுத்த மட்டுமே நேரம் நம்மை அனுமதிக்கும். முதலில், லூக்கா தான் தேர்ந்தெடுத்த காரியங்களை இந்த புத்தகத்தில் எழுதியுள்ளார். இரண்டாவதாக, அவர் இந்த புத்தகத்தை பல பாகங்களாக வடிவமைத்தார். மூன்றாவதாக, அவர் தனது போதனைகள் பலவற்றை மறைமுகமான வழிகளில் தெரிவித்தார். இந்த புத்தகத்தில் உள்ள விஷயங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்மையை முதலில் பார்ப்போம்.

தேர்ந்தெடுத்தவை

ஒவ்வொரு வரலாற்றாசிரியரும் தேர்ந்தெடுப்பவராக இருக்க வேண்டும். எந்தவொரு மனிதனும் விரிவான அறிக்கையை வழங்குவதற்கு உலகில் பல உண்மைகள், நபர்கள் மற்றும் நிகழ்வுகள் அவனுக்கு உள்ளன. அப்போஸ்தலர் புத்தகத்தில் உள்ள நிகழ்வுகள், இயேசுவின் பரமேறுதலில் தொடங்கி பவுல் ரோமில் சிறை வைக்கப்பட்டது வரையிலான வருடங்களை உள்ளடக்கியுள்ளன, அதாவது மூன்று அல்லது நான்கு தசாப்தங்கள். இந்த நேரத்தில் சபையில் வியக்கத்தக்க எண்ணிக்கையிலான குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் நடந்தன. அவை எண்ண முடியாத அளவுக்கு அதிகமானவை. இருப்பினும், லூக்கா 28 சிறிய அதிகாரங்களை மட்டுமே எழுதினார். எனவே, அவர் சொல்லக்கூடியவற்றில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே அவர் குறிப்பிட்டுள்ளார் என்பதை நாம் அறிவோம். ஆனால் என்ன நிகழ்வுகளை உள்ளடக்க வேண்டும் என்பதை அவர் எவ்வாறு தீர்மானித்தார்? எதைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் எப்படி முடிவு செய்தார்? அப்போஸ்தலர்கள் மூலம் இயேசுவின் பணியைப் புரிந்துகொள்வதற்கு முக்கியமான வரலாற்றுத் துணுக்குகளைத் தேர்ந்தெடுக்க லூக்கா பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்டார், மேலும் அது அப்போஸ்தலர்களின் சில மையப் போதனைகளைத் தழுவிக்கொள்ள அவரது வாசகர்களை அறிவுறுத்துகிறது.

-16-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

எனவே, நவீன உலகில் அப்போஸ்தலர் புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கான
வழிகளைக் கண்டுபிடிக்க முயற்சிக்கும்போது, நாம் இரண்டு விஷயங்களைச்
செய்ய வேண்டும். ஒருபுறம், சபை வரலாற்றின் இந்த காலகட்டத்தைப் பற்றி நாம் அறிய விரும்பும் அனைத்தையும் லூக்கா பதிவு செய்துள்ளார் என்று
நினைக்கும் பிழையைத் தவிர்க்க வேண்டும். அவர் பதிலளிக்காத பல கேள்விகள் உள்ளன, எனவே நமது நவீன பிரச்சனைகளுக்கான ஒவ்வொரு பதிலையும் அப்போஸ்தலர் புத்தகத்தில் தேடுவதைத் தவிர்க்க வேண்டும்.
மறுபுறம், அப்போஸ்தலர் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு பதிவும் லூக்கா
தனது இரு மடங்கு நோக்கத்தை நிறைவேற்ற உதவுவதாக இருப்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, லூக்காவுக்கு இந்த இலக்கை மேலும் மேம்படுத்த ஆரம்பகால சபையைப் பற்றி இது எனக்கு என்ன கற்பிக்கிறது? மற்றும் என்ன கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ள இது என்னை ஊக்குவிக்கிறது? என இது எவ்வாறு உதவுகிறது என்பதை அறிய நாம் புத்தகத்தில் உள்ள அனைத்தையும் படிக்க வேண்டும். இது போன்ற கேள்விகளை நாம் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும்.

அத்தியாயம்

தேர்ந்தெடுக்கப்பட்டவை தவிர, இந்த புத்தகத்தின் இலக்கியம் அத்தியாயங்களாக உள்ளன. அதாவது, அப்போஸ்தலருடைய நடபடிகள் என்பது சிறு சிறு கதைகள் மற்றும் கணக்குகளின் தொடர்ச்சியான தொகுப்பாகும். அப்போஸ்தலர் புத்தகத்தைப் படிக்கும்போது, அதன் ஒவ்வொரு தனிப்பட்ட விவரிப்பும் லூக்காவின் ஒட்டுமொத்த உத்தி மற்றும் செய்தியின் ஒரு பகுதியாக இருப்பதைக் கவனிக்க வேண்டியது அவசியம். கிறிஸ்துவில் இருக்கும் தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பற்றி தெயோப்பிலுவுக்கு கற்பிக்கும் அவரது ஒட்டுமொத்த பணிக்கு ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் பங்களிக்கின்றன. எனவே, இந்த பெரிய படம் நாம் அப்போஸ்தலருடைய நடபடிகளில் படிக்கும் ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் பின்னணியாகவும் சூழலாகவும் இருக்க வேண்டும்.
ஆனால் ஒவ்வொரு அத்தியாயமும் வேறுபட்டது. ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு சிறிய காரியத்தையாவது கூறுகின்றன, சுவிசேஷத்தின் மூலம் கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்தை தொடர்ந்து கட்டியெழுப்ப சபை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி கற்பிக்க அதன் சொந்த விவரங்கள் உள்ளன. நாம் அப்போஸ்தலர் புத்தகத்தை படிக்கும்போது, லூக்கா குறிப்பிட்டுக்கொண்டிருந்த தனிப்பட்ட குறிப்புகளை மறைத்துவிடும் படிக்கு அவருடைய மேலோட்டமான நோக்கத்திற்கு நம் கவனம் செல்ல நாம் அனுமதிக்கக்கூடாது என்பதே இதன் அர்த்தம். பெரிய மற்றும் சிறிய படம் இரண்டிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும், ஒவ்வொரு அத்தியாயமும் பெரிய இலக்குக்கு எவ்வாறு பங்களிக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம், ஆனால் ஒவ்வொரு அத்தியாயமும் அந்த இலக்கின் விவரங்களை வரையறுக்க உதவுகிறது.
இதுமட்டுமல்லாமல், இந்த புத்தகத்தின் வகை அதன் போதனையின் பெரும்பகுதியை வெளிப்படுத்தும் விதத்திலும் மறைமுகமாக உள்ளது.

மறைமுக ஆதாரங்கள்

பரவலாகப் பேசினால், புதிய ஏற்பாட்டில் கதை சொற்பொழிவு மற்றும்
வாதப் பேச்சு என இரண்டு முக்கிய வகையான இலக்கியங்கள் உள்ளன. வாதப் பேச்சு என்பது ஒரு புத்தகத்தில் ஒரு பாத்திரம் பேசுவது அல்லது ஒரு எழுத்தாளர் தனது பார்வையாளர்களிடம் நேரடியாகப் பேசுவது போன்ற ஒரு வகையான உரையாடலைப் பிரதிபலிக்கும் இலக்கியம். எடுத்துக்காட்டாக, புதிய ஏற்பாட்டு நிருபங்கள் முதன்மையாக வாதப் பிரசங்கத்தைக் கொண்டிருக்கின்றன, அதில் பவுலைப் போன்ற ஒரு எழுத்தாளர் தனது கடிதத்தைப் பெற்றவர்களிடம் நேரடியாகப் பேசுகிறார். நிச்சயமாக, சில நிருபங்களில் கதையின் துணுக்குகள் இருக்கின்றன, மேலும் அவ்வப்போது பாடல் அல்லது பழமொழிகளைக் கூட நாம் காண்கிறோம். ஆனால் அவை பெரும்பாலும் வாதப் பேச்சுக்களால் ஆனவை. மேலும் இங்கு வாதப் பிரசங்கத்தைப் பற்றி நாம் முக்கியமாகக் கூற விரும்புவது என்னவென்றால், அது அதன் பெரும்பாலான போதனைகளை நேரடியாகவும்

-17-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

வெளிப்படையாகவும் தெரிவிக்கிறது. பவுல் தனது வாசகர்களை யோசிக்க அல்லது ஏதாவது செய்யச் சொல்லி ஒரு கடிதம் எழுதியபோது, தான் விரும்பியதை நேரடியாகச் சொன்னார்.
மறுபுறம், நான்கு சுவிசேஷங்களிலும் அப்போஸ்தலர் புத்தகத்திலும்
கதை சொற்பொழிவு இலக்கியத்தின் ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. கதை சொற்பொழிவு என்பது ஒரு கதையைச் சொல்லும் இலக்கியம் குறைந்த நேரடியான வழியில் கற்பித்தலை வழங்குகிறது. நிச்சயமாக, இந்த புத்தகங்களிலும், முதன்மையாக சில கதாபாத்திரங்களின் பேச்சுகளில் வாதப் பேச்சுக்கள் தோன்றும், ஆனால் சுவிசேஷங்கள் மற்றும் அப்போஸ்தலரில் கதை தான் அதிகமாக உள்ளது. மேலும் விஷயங்களை வெளிப்படையாகக் கற்பிக்க முனைகிற வாதப் பிரசங்கம் போலல்லாமல், கதை சொற்பொழிவு விஷயங்களை மறைமுகமாக கற்பிக்க முனைகிறது, வாசகரை அதன் படிப்பினைகளை ஊகிக்க அனுமதிக்கிறது. கதைகள் வாசகர்களை நேரடி அறிவுறுத்தல்கள் மூலம் பாதிக்காது, மாறாக மிகவும் நுட்பமான வழிகளில் பாதிக்கின்றன. பாத்திரங்களின் மனப்பான்மை, செயல்கள் மற்றும் வார்த்தைகளிலிருந்து வாசகர்கள் பாடம் கற்றுக்கொள்வார்கள், மேலும் தேவனுக்குப் பிரியமானவற்றை ஏற்றுக்கொள்வதற்கும், தேவனுடைய சித்தத்திற்கு முரணானவற்றைத் தவிர்ப்பதற்கும் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன.
இதைப் பற்றி இப்படி யோசித்துப் பாருங்கள். பெரும்பாலும், அப்போஸ்தலருடைய நடபடிகள் போன்ற விவரிப்புகள் உண்மைகளை கூறுவதற்கு மட்டுமே தோன்றும். இது நடந்தது, அது நடந்தது, பின்னர் வேறு நடந்தது. மேலோட்டமாகப் பார்த்தால், இது நிகழ்வுகளின் அறிக்கையாகவே தோன்றும். நாம் பார்த்தபடி, எப்போதாவது லூக்கா தனது கதைகளின் கூறுகளின் முக்கியத்துவத்தைப் பற்றி வெளிப்படையாகக் கருத்துரைத்தார். ஆனால் பெரும்பாலும், அவர் நிகழ்வுகள் அல்லது உண்மைகளை சிறிய கருத்துகளாக அல்லது கருத்து இல்லாமல் விவரித்தார். அப்படியிருந்தும், அவரது கதைகள் வெறுமனே நிகழ்வுகளை பதிவு செய்வதற்காக எழுதப்படவில்லை என்பதே உண்மை. அவர் செயற்கையான நோக்கங்களையும் கொண்டிருந்தார், மேலும் இந்த கருத்துக்களை மறைமுகமாக தொடர்பு கொள்ள அவரது கதைகளைப் பயன்படுத்தினார். இந்தக் கருத்தை எனது சொந்த வாழ்க்கையிலிருந்து ஒரு கதை மூலம் விளக்குகிறேன். என் மகள் மிகவும் இளமையாக இருந்தபோது, இரவு உணவிற்கு முன் சாக்லேட் சாப்பிடக்கூடாது என்று அவளுக்கு கூறப்பட்டது. ஆனால் ஒரு நாள் மாலை அவள் உதடுகளில் சாக்லேட்டுடன் மேஜைக்கு வந்தாள். சாக்லேட் சாப்பிட்டாயா என்று நான் அவளிடம் கேட்டேன், அவள் பெரிய கண்களுடன் மறுப்புடன் பதிலளித்தாள்: "என்னிடம் சாக்லேட் எதுவும் இல்லை, அப்பா." ஒரு பெற்றோராக, சூழ்நிலையைச் சமாளிக்க எனக்கு இரண்டு வழிகள்
இருந்தன. இந்த விஷயத்தை நான் நேரடியாகவும் வெளிப்படையாகவும் ஒரு வாதப் பேச்சு மூலம் பேசியிருக்கலாம். “நீ உண்மையைச் சொல்லவில்லை" என்று நான் சொல்லியிருக்கலாம். "உன் முகத்தில் சாக்லேட்டை நான் பார்க்கிறேன்! நீ மாட்டிக் கொண்டாய்." ஆனால் ஒரு கதை வடிவில் அவளிடம் சொல்லியிருக்கவும் என்னால் முடியும், அது மிகவும் மறைமுகமாக சொல்வதாக இருந்தது. நான் என் சிறிய மகளை என் மடியில் எடுத்துக்கொண்டு அவளிடம், “உனக்கு ஒரு கதை சொல்கிறேன். ஒரு காலத்தில், ஒரு சிறுமி தனது சிறந்த உடையை அணிந்துகொண்டு விளையாட வேண்டாம் என்று சொல்லப்பட்டாள். ஆனால் அவள் தனது உடையில் விளையாடி மிகவும் அழுக்காகிவிட்டாள். சிறுமியின் செயல்களைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?
இது போன்ற ஒரு கதை சொல்லாட்சி உத்தி முதன்மையாக மறைமுகமான
நிலைகளில் வேலை செய்கிறது. “கீழ்ப்படியாதது மோசமானதல்லவா?” என்று அந்த குழந்தையை இது ஆச்சரியப்படுத்த வைக்கிறது. இவ்வகையான கருத்துக்களை மறைமுகமாகத் தெரிவிப்பதே கதையின் அழகும் ஆற்றலும் ஆகும். இது போதுமான நுணுக்கமாக இருந்தால், கதையின் சூழ்நிலைக்குள் கேட்பவரை வரவைக்கும். அந்த நபர் தனிப்பட்ட முறையில் ஈடுபட முடியும். அதனால் கேட்பவர் தன்னை நியாயப்படுத்த மாட்டார். இது கேட்பவரை கற்றுக்கொள்ள அனுமதிக்கிறது.

-18-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

அப்போஸ்தலர் புத்தகத்தில் சுமார் 70% கதை வடிவம் உள்ளது.
புத்தகத்தின் பெரும்பகுதியிலும், லூக்கா முக்கியமாக தனது வாசகர்களிடம், "ஆரம்பகால சபையில் தேவன் செய்த வேலையைப் பற்றிய ஒரு கதையைச் சொல்கிறேன்" என்று குறிப்பிடுகிறார். நிச்சயமாக, அவர் சொன்ன கதை முற்றிலும் உண்மை. உண்மை வரலாற்றின் உலகில் நுழைய அவர்களை அழைத்தார். ஆனால் அவர் இந்த வரலாற்றை ஒரு கதை வடிவில் முன்வைத்தார், ஏனெனில் அவர் பதிவுசெய்த உண்மைகளிலிருந்து முடிவுகளை தனது வாசகர்கள் ஊகிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆகவே, அப்போஸ்தலர் புத்தகத்தைப் படிக்கும்போது, இந்த மறைமுகமான போதனைகளைத் தேடுவது நமக்கு முக்கியம்.
நிச்சயமாக, எந்தவொரு வேதாகமக் கதையையும் மதிப்பீடு செய்து, நம் வாழ்வில் பயன்படுத்துவதற்கான முக்கிய வழிகளில் ஒன்று, நடக்கும் செயல்களுக்கு தேவன் எவ்வாறு எதிர்வினையாற்றுகிறார் என்பதைப் பார்ப்பதாகும். மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக, அவரது வார்த்தைகள் மற்றும் செயல்கள் முற்றிலும் பிழையில்லாதவை. இதன் விளைவாக, அப்போஸ்தலர் புத்தகத்திலுள்ள தேவன் அங்கீகரிக்கும் மற்றும் ஆசீர்வதிக்கும் விஷயங்களையும், அவர் ஏற்காத அல்லது சபிக்கும் விஷயங்களையும் நாம் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். தேவன் ஆசீர்வதிக்கும் அனைத்தும் நல்லதாக இருக்க வேண்டும், அவர் ஏற்காதது அல்லது சபிப்பது தீயதாக இருக்க வேண்டும். அப்போஸ்தலர் புத்தகத்தைப் படிக்கும்போது, தேவனுக்குப் பிரியமான நம்பிக்கைகள், மனப்பான்மைகள் மற்றும் நடத்தைகளைப் பின்பற்றவும், அவருக்கு விரோதமானவற்றை தவிர்க்கவும் நாம் முயல வேண்டும். இது தவிர, லூக்கா முக்கிய ஆரம்பகால சபைத் தலைவர்களின்
கண்ணோட்டங்களை பெரிதும் நம்பியிருந்ததால், லூக்காவின் மறைமுகமான போதனைகளைப் பார்க்க மற்றொரு நம்பகமான வழி, லூக்கா நமக்கு வழங்கிய உதாரணங்களைக் கவனிப்பதாகும். அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் பிற மரியாதைக்குரிய சபைத் தலைவர்கள் போன்ற நம்பகமானவர்கள் ஏதாவது செய்தாலோ அல்லது சொன்னாலோ, அவர்கள் மீது அனுதாபம் காட்ட நாம் அழைக்கப்படுகிறோம் என்று பொதுவாக நாம் ஊகிக்க முடியும். அவர்களுடைய செயல்கள் பொருத்தமாக இருந்தன, அவர்களுடைய சாட்சி உண்மையானது. இதன் விளைவாக, இந்த அழைப்புக்கு நம் இருதயத்தில் பதிலளிப்பதாகவும், நம்முடைய சொந்த நடத்தை மற்றும் எண்ணங்களை அவற்றின் மாதிரியாக மாற்றுவதாகவும் நமது பதில் இருக்க வேண்டும்.
மேலும் அதை தலை கீழாக பார்த்தாலும் அதுவும் உண்மை தான்.
அப்போஸ்தலர்கள் அல்லது சபையால் அப்போஸ்தலர் புத்தகத்தில் உள்ள கதாபாத்திரங்கள் கண்டனம் செய்யப்படும்போது, அவர்களின் செயல்கள் தீயவை என்றும், அவர்களின் முன்மாதிரிகளை நாம் பின்பற்றக்கூடாது என்றும் நாம் ஊகிக்க முடியும். இப்போது, இவை எந்த வகையிலும் லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகளில் ஏற்படுத்திய தாக்கங்கள் அல்ல. ஆனால் அவை நவீன வாசகர்களுக்கு வேதாகமக் கதைகளிலிருந்து சரியான அனுமானங்களை எவ்வாறு உருவாக்குவது என்பதைக் கற்றுக்கொள்வதற்கு ஒப்பீட்டளவில் உறுதியான அடித்தளத்தை வழங்குகின்றன.
அப்போஸ்தலர்களின் இலக்கியத் தன்மையைப் பற்றிய இந்தப் புரிதலை
மனதில் கொண்டு, அப்போஸ்தலர் புத்தகத்தை நாம் பயன்படுத்தும் விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் முதல் நூற்றாண்டுக்கும் நவீன உலகத்திற்கும் இடையே உள்ள தொடர்ச்சியின்மைகளுக்கு நாம் திரும்ப வேண்டும்.

தொடர்ச்சியின்மைகள்

வேதம் நமக்காக எழுதப்பட்டிருந்தாலும், அது நேரடியாக நமக்கு எழுதப்படவில்லை என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். தெயோப்பிலு மற்றும் கி.பி முதல் நூற்றாண்டில் இருந்தவர்கள் தான் முதலாக இந்த புத்தகத்தை பெற்றுக்கொண்டவர்கள் என்பதை நாம் வெளிப்படையாக அறிவோம். எனவே, ஏதோ ஒரு வகையில், லூக்காவின் புத்தகத்தைப் படிக்கும்போது மற்றவர்களின் புத்தகத்தையே வாசிக்கிறோம். லூக்கா நம்மிடம் சொன்னதை நாம்

-19-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

அதிகம் கேட்கவில்லை, அவர் அவர்களிடம் சொன்னதை நாம் கேட்கிறோம். ஆகவே, தெயோப்பிலு மற்றும் லூக்காவின் மற்ற அசல் வாசகர்களுக்குச் செய்ததை விட, அப்போஸ்தலருடைய நடபடிகளில் உள்ள சில போதனைகள் நமக்கு வித்தியாசமாகப் பொருந்தும் என்பதை நாம் எதிர்பார்க்க வேண்டும். இந்த வேறுபாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், வேதத்தில் நாம் காண்பதை நாம் திரும்பத் திரும்பச் சொன்னால், நாம் அடிக்கடி தேவனுடைய வார்த்தையை தீங்கு விளைவிக்கும் வழிகளில் தவறாகப் பயன்படுத்துவோம்.
லூக்காவின் உலகத்திற்கும் நம்முடைய உலகத்திற்கும் இடையிலான இந்த தொடர்ச்சியின்மைகளை இரண்டு வழிகளில் சுருக்கமாகக் கூறுவோம். முதலாவதாக, நாம் அவர்கள் வாழ்ந்ததை விட வித்தியாசமான காலத்தில் வாழ்கிறோம். இரண்டாவதாக, முதல் நூற்றாண்டிலிருந்து உலகம் கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிட்டது, அதனால் நமக்கு வெவ்வேறு சூழ்நிலைகள் உள்ளன, லூக்கா இந்த புத்தகத்தை முதலில் எழுதியவர்களிடமிருந்து வேறுபட்ட சூழ்நிலைகள் இப்போது உள்ளன. அப்போஸ்தலர் புத்தகத்தை முதலில் பெற்றவர்களிடமிருந்து வேறுபட்ட காலத்தில் நாம் வாழ்கிறோம் என்ற உண்மையை முதலில் பார்ப்போம்.

வேறுபட்ட காலம்

உதாரணமாக, அப்போஸ்தலர்களின் புத்தகம் முதல் நூற்றாண்டில்
கிறிஸ்துவின் அதிகாரப்பூர்வ சாட்சிகளான அப்போஸ்தலர்களை மையமாகக் கொண்டுள்ளது என்பதை நினைவில் கொள்வது மிகவும் முக்கியம். அப்போஸ்தலர்கள் மூலம் தேவனுடைய பல செயல்பாடுகள் மீட்பு வரலாற்றில் அந்த நேரத்திற்கும் இடத்திற்கும் மட்டுமானதாக இருந்தன; அவை மீண்டும் மீண்டும் செய்ய முடியாத அடித்தளமான சாதனைகளாக இருந்தன. ஒரே ஒரு உதாரணமாக, அப்போஸ்தலர்களின் வாழ்க்கை தனித்துவமானது. அடுத்த பாடத்தில் நாம் பார்ப்பது போல், இன்னொரு அப்போஸ்தலன் இருக்க முடியாது. ஒன்று, அப்போஸ்தலனாவதற்கு தகுதி பெற, ஒரு மனிதன் உயிர்த்தெழுந்த கர்த்தரைப் பார்த்திருக்க வேண்டும். மற்றொன்று, அவர் தேவனால் நேரடியாக அப்போஸ்தலன் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும். ஆகவே, நம்முடைய சொந்த சபைத் தலைவர்களை மதிக்கவும், அவர்களுக்குக் கீழ்ப்படியவும் அப்போஸ்தலர் நமக்குக் கற்பிக்கிறது என்று சொல்வது நியாயமானதாக இருந்தாலும், இன்று நம்முடன் வாழும் அப்போஸ்தலர்கள் இல்லை. புதிய ஏற்பாட்டில் அவர்களின் எழுத்துப்பூர்வ சாட்சியத்திற்கு அடிபணிவதே நாம் செய்யக்கூடிய சிறந்த காரியம்.
துரதிர்ஷ்டவசமாக, பல கிறிஸ்தவ குழுக்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் துல்லியமாக பின்பற்றப்பட வேண்டிய கிறிஸ்தவ வாழ்க்கையின் மாதிரிக்காக அப்போஸ்தலருடைய நடபடிகளைத் தேடுகின்றன. உதாரணமாக, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வியத்தகு, அற்புத வழிகளில் ஊற்றப்பட்டார் என்றும், அவரைப் பெற்றவர்கள் பல்வேறு மொழிகளிலும் பேச்சுவழக்குகளிலும் சுவிசேஷத்தை அறிவிக்கத் தொடங்கினர் என்றும் அப்போஸ்தலர் 2:1-4 போதிக்கிறது. கிறிஸ்துவுக்கு சேவை செய்ய அப்போஸ்தலர்கள் மற்றும் பிற ஆரம்பகால விசுவாசிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்காக, ஆவியானவர் முதலில் ஊற்றப்பட்டபோது நடந்த இது ஒரு சிறப்பு நிகழ்வாகும். இதேபோன்ற நிகழ்வுகள் எப்போதாவது அப்போஸ்தலருடைய நடபடிகளில் நிகழ்ந்தன, ஆனால் இது அப்போஸ்தலர்களின் வேலையின் நேரடி விளைவாக மட்டுமே நிகழ்ந்தன. அப்போஸ்தலருடைய நடபடிகளில் நிலையானது என்னவென்றால், ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியானவரைப் பெறுகிறார், அது அவருடைய குணாதிசயத்தில் மாற்றம் ஏற்பட்டு சாட்சியாக இருப்பான். இந்த புத்தகத்தில் நிலையானது அல்ல என்பது பரிசுத்த ஆவியின் குறிப்பிட்ட வெளிப்பாடுகளின் பிரசன்னம் இருப்பது அல்லது பிரசன்னம் இல்லாமலிருப்பதாகும். இருப்பினும், சபையின் சில கிளைகள் இன்றும் கூட பல்வேறு மொழிகளில் சுவிசேஷத்தை அறிவிப்பதன் மூலம் பரிசுத்த ஆவியின் தனி நிரப்புதல் எப்போதும் வெளிப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. முதல் நூற்றாண்டிற்கும் நமது நாளுக்கும் இடைப்பட்ட தொடர்ச்சியின்மைகளை நல்லெண்ணம் கொண்ட கிறிஸ்தவர்கள் கணக்கிடத் தவறும்போது, அவர்கள் பெரும்பாலும் அப்போஸ்தலர்களின் போதனைகளை பொருத்தமற்ற வழிகளில் பயன்படுத்த முயற்சி செய்கிறார்கள்.

-20-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

வெவ்வேறு சூழ்நிலைகள்

அப்போஸ்தலருடைய நடபடிகளின் அசல் பார்வையாளர்களை விட வேறுபட்ட
நேரத்தில் வாழ்வதைத் தவிர, வெவ்வேறு கலாச்சாரங்கள் மற்றும் தனிப்பட்ட சூழ்நிலைகள் போன்ற வெவ்வேறு சூழ்நிலைகளும் நமக்கு உள்ளன. அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள அனைத்து நிகழ்வுகளும் முதல் நூற்றாண்டின் வரலாற்று சூழ்நிலைகளில் நடந்தன, மேலும் லூக்காவின் கணக்குகளின் பல அம்சங்கள் இந்த வரலாற்று மற்றும் கலாச்சார சூழ்நிலைகளில் நிபந்தனைக்குட்பட்டவை. துரதிர்ஷ்டவசமாக, அப்போஸ்தலருடைய நடபடிகளின் போதனைகளுக்கு
உண்மையாக இருக்கும் முயற்சியில், பல நூற்றாண்டுகளாக பல கிறிஸ்தவ குழுக்கள் முதல் நூற்றாண்டு சபையின் கலாச்சார நடைமுறைகளுக்கு திரும்ப முயன்றனர். உதாரணமாக, அப்போஸ்தலர் 5:42 இல் சபை தனிப்பட்ட வீடுகளில் கூடுகிறது என்று வாசிக்கிறோம். இந்த அடிப்படையில் சில கிறிஸ்தவர்கள் இன்று சபை வீடுகளில் கூட வேண்டும், தேவாலய கட்டிடங்களில் கூடக்கூடாது என்று வலியுறுத்தியுள்ளனர். மேலும் அப்போஸ்தலர் 6:1 ல் எருசலேமில் உள்ள சபை விதவைகளுக்கு உணவு வழங்கிக் கொண்டிருந்ததைக் காண்கிறோம். இதன் விளைவாக, இன்று சில கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு சபையும் அதன் ஊழியத்தின் ஒரு பகுதியாக விதவைகளுக்கான உணவு சேவையை வைத்திருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். இப்போது நிச்சயமாக, இன்று சபை வீடுகளில் கூடுவதிலோ அல்லது விதவைகளுக்கு உணவு வழங்குவதிலோ உள்ளார்ந்த தவறு எதுவும் இல்லை. ஆனால் இந்த நடைமுறைகள் முதல் நூற்றாண்டு சபையின் சூழ்நிலைகளின் அடிப்படையில் இருந்தன என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். உதாரணமாக, உபத்திரவத்தின் காரணமாக அவர்கள் வீடுகளில் சந்திப்பதை அவசியமாக்கியது. ஆனால் உபத்திரவங்கள் குறைவாகவோ அல்லது துன்புறுத்தப்படுவதோ இல்லாத உலகின் சில பகுதிகளில், சபை வீடுகளில் சந்திக்க வேண்டிய அவசியமில்லை. நம்முடைய சூழ்நிலைகள் அவர்களைப் போலவே இருப்பதால், இவை வேதாகம கொள்கைகளின் முறையான பயன்பாடுகளாக இருக்கலாம். ஆனால் நம்முடைய சூழ்நிலைகள் வித்தியாசமாக இருப்பதால், இதே வேதாகம கொள்கைகளை வெவ்வேறு வழிகளில் பயன்படுத்த நாம் கடமைப்பட்டிருக்கலாம்.
உண்மையில், அப்போஸ்தலர் புத்தகத்தில் கூட ஒரே கொள்கையின் வெவ்வேறு பயன்பாடுகளை நாம் அடிக்கடி காண்கிறோம். உதாரணமாக, அப்போஸ்தலர் 2:44-45 இல், எருசலேமில் உள்ள சபையின் உறுப்பினர்கள் பொதுவாக தங்கள் பொருள்களை பகிர்ந்து வாழ்ந்ததாக லூக்கா விவரித்தார். இருப்பினும், அப்போஸ்தலனாகிய பவுல் நிறுவிய பல சபைகள் பணக்கார குடிமக்கள் அல்லது நகரத் தலைவர்களின் வீடுகளில் கூடியது, ஒன்றாக ஒரே இடத்தில் வாழ்வது பற்றி எதுவும் குறிப்பிடவுமில்லை மற்றும் அதை விமர்சிக்கவுமில்லை என்பதை அப்போஸ்தலர் புத்தகத்திலேயே காண்கிறோம். ஆரம்பத்திலிருந்தே, அதே வேத கொள்கை தற்போதைய சூழ்நிலைகளுக்கு பொருத்தமான வழிகளில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை திருச்சபை அங்கீகரித்துள்ளது. பொறுப்பான பயன்பாட்டிற்கு மாற்றாக நாம் ஒருபோதும் வெறும் போலித்தனத்திற்குத் தீர்வு காணக்கூடாது. அப்போஸ்தலருடைய நடபடிகளின் இலக்கியத் தன்மையை விவரித்து,
லூக்காவின் நாளுக்கும் நம்முடைய நாளுக்கும் இடையே உள்ள இடைவெளிகளை விரிவாகக் கோடிட்டுக் காட்டிய பிறகு, முதல் நூற்றாண்டுக்கும் நவீன உலகத்துக்கும் இடையேயான சில குறிப்பிடத்தக்க தொடர்ச்சிகளுக்கு நாம் திரும்ப வேண்டும்.

தொடர்ச்சிகள்

பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நபர்களில் இருக்கும்
திரியேக தேவன் நம்மிடம் இருப்பதாகக் கூறுவதன் மூலம் இரண்டு காலகட்டங்களிலும் கிறிஸ்தவர்களுக்கு இடையிலான தொடர்ச்சியை நாம் சுருக்கமாகக் கூறலாம்; அதே குறிக்கோள், அதாவது கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்தை உருவாக்குவது; மற்றும் அதே சுவிசேஷம், அதே இரட்சிப்பு மற்றும் மீட்பின் செய்தி, இந்த இரட்சிப்பு விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும்

-21-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

கீழ்ப்படிதல் மூலம் வருகிறது. முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவர்களுக்கு இருந்த அதே தேவன் நமக்கும் இருக்கிறார் என்பதை முதலில் பார்ப்போம்.

அதே தேவன்

லூக்காவினுடைய இரட்சிப்பைக் குறித்த வரலாற்றின் பதிவு,
அப்போஸ்தலர்களும் ஆரம்பகால சபைகளும் சேவை செய்த அதே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கே நாமும் சேவை செய்கிறோம், சாட்சியளிக்கிறோம் என்பதை நினைவூட்டுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் முதல் நூற்றாண்டில் இருந்த அதே பரிசுத்த ஆவியால் அதிகாரம் பெற்றவர்கள். நாம் அனைத்தையும் ஒரே பிதாவின் மகிமைக்காகவே செய்கிறோம். நம்முடைய திரியேக தேவன் மாறவில்லை.
முதல் நூற்றாண்டில் தேவன் மகத்தான வழிகளில் சுவிசேஷத்தின் மூலம்
வேலை செய்தார், இன்றும் அதைத் தொடர்கிறார். தேவன் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலிருந்தும் அல்லது உங்கள் சபை அல்லது ஸ்தாபனத்தின் வாழ்க்கையிலிருந்தும் வெகு தொலைவில் இருப்பதாகத் தோன்றினால், அது சரியல்ல. இழந்தவர்களுக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்து அவருடைய சபையைக் கட்டும் வேலையை தேவன் செய்வதை நாம் காணவில்லை என்றால், நாம் மனந்திரும்புதலுடனும் விசுவாசத்துடனும் தேவனிடம் திரும்ப வேண்டும், அவருடைய இரட்சிப்பின் வரலாற்றை நம் வாழ்விலும் சபைகளிலும் தொடரும்படி கேட்க வேண்டும்.
ஒரே தேவனைக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், அப்போஸ்தலர் புத்தகத்தில் சபை கொண்டிருந்த அதே குறிக்கோளை இன்று கிறிஸ்தவர்கள் கொண்டுள்ளனர்.

அதே குறிக்கோள்

அப்போஸ்தலர் புத்தகத்தில், அப்போஸ்தலர்கள் மூலம் கிறிஸ்துவில் அவருடைய ராஜ்யத்தை கட்டியெழுப்புவதே தேவனின் நோக்கம் ஆகும். சபையை வளர்ப்பதன் மூலமும், சுவிசேஷத்தின் மூலம் சபையின் அளவை அதிகரிப்பதன் மூலமும் அவர்கள் இந்த இலக்கை நோக்கி உழைத்தனர். ஆனால் முழு பூமியையும் நிரப்ப தேவனுடைய ராஜ்யத்தை விரிவுபடுத்துவதற்கு பன்னிரண்டு மனிதர்களுக்கு மேல் ஒரு சில ஆண்டுகள் வேலை செய்ய வேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர், எனவே அவர்களுடன் சேர்ந்து உழைக்கவும் அவர்களின் மரணத்திற்குப் பிறகும் தொடரவும் சபையை தயார் செய்தனர். இயேசு தம்முடைய ராஜ்யத்தைக் கட்டும் பணியை அப்போஸ்தலர்களுக்கு ஒப்படைத்ததைப் போல, அப்போஸ்தலர்கள் இந்தப் பணியை சபைக்கு வழங்கினர் என்று நாம் கூறலாம். நிச்சயமாக, கிறிஸ்து மகிமையில் திரும்பும் வரை இந்த ராஜ்யத்தைக் கட்டியெழுப்பும் பணி முடிக்கப்படாது. எனவே, நவீன சபையின் குறிக்கோள், கிறிஸ்துவில் தம்முடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்பிய தேவனுடைய பணிக்கு இணங்குவது, முழு உலகத்தையும், எல்லா உயிர்களையும் அவருடைய கர்த்தத்துவத்தின் கீழ் கொண்டுவருவதாகும். நாம் இதைச் செய்வதற்கான முதன்மையான வழிகளில் ஒன்று, இரட்சிப்பு, நெறிமுறைகள், தெய்வீக குணம், உறவுகள், சுவிசேஷம் மற்றும் வாழ்க்கையில் உள்ள மற்ற எல்லா விஷயங்களையும் பற்றிய அப்போஸ்தலர்களின் போதனைகளை நம்புவதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் கிறிஸ்துவை கனம் செய்து கீழ்ப்படிந்தால், சபை அவருடைய அப்போஸ்தலர்களின் அதிகாரபூர்வமான சாட்சிக்கும் அடிபணிய வேண்டும். உதாரணமாக, அப்போஸ்தலர்கள் பல கலாச்சாரங்கள் மற்றும் சூழ்நிலைகளில் ராஜ்யத்தை விரிவுபடுத்திய வெவ்வேறு வழிகளைப் பதிவு செய்வதில் லூக்கா கவனமாக இருந்தார். அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி, நம்முடைய நாளில் ராஜ்யத்தின் இலக்கை அடைய இதேபோன்ற வழிகளைப் பயன்படுத்தலாம். ஆம், நவீன மற்றும் பழங்கால உலகிற்கு இடையே உள்ள தொடர்ச்சியின்மைகளின் வெளிச்சத்தில் நாம் மாற்றங்களைச் செய்ய வேண்டும். ஆனால் நாம் நமது சொந்த நிகழ்ச்சி நிரலை பின்பற்றுவதை விட தேவனால் கூறப்பட்ட பணிக்கு அடிபணிய முற்படுவதால், ஒவ்வொரு தலைமுறையிலும் அதன் பின்னணியில் உள்ள குறிக்கோள் மற்றும் கொள்கைகள் ஒரே மாதிரியாக இருக்கும்.

-22-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

இறுதியாக, ஒரே தேவன் மற்றும் ஒரே குறிக்கோளுடன் கூடுதலாக, நவீன கிறிஸ்தவர்கள் முதல் நூற்றாண்டில் சபையில் இருந்த அதே சுவிசேஷத்தை அறிவிக்க அழைக்கப்படுகிறார்கள்.

அதே சுவிசேஷம்

உலகம் எவ்வளவு மாறினாலும், ஒன்று மாறாமல் உள்ளது: மனிதர்கள்
தேவனுக்கு எதிரான பாவக் கிளர்ச்சியில் வீழ்ந்து, அவரிடமிருந்து அந்நியப்பட்டு, மீட்பின் அவசியத்தில் உள்ளனர். நம் அனைவருக்கும் ஒரே இரட்சிப்பு தேவை. மேலும் அந்த இரட்சிப்பு கிறிஸ்துவில் கிடைக்கிறது, அவர் நம்முடைய பாவத்தை மன்னித்து, அவருடைய ராஜ்யத்தில் நம்மைக் கொண்டுவருகிறார். இதுவே முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்கள் போதித்த சுவிசேஷமாகும். இது அப்போஸ்தலருடைய நடபடிகளில் லூக்கா அறிவித்த நற்செய்தியாகும். இது இன்று நாம் தழுவி ஏற்றுக்கொள்ள வேண்டிய நற்செய்தியாகும்.
மற்றும் செய்தி எளிமையானது. பவுலும் சீலாவும் அப்போஸ்தலர் 16:31-ல் பிலிப்பிய சிறைச்சாலை அதிகாரியிடம் கூறியது போல்:

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது
நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் (அப்
16:31).

இந்த எளிய செய்தி ஆழமான தாக்கங்களைக் கொண்டுள்ளது. இது நமது
தனிப்பட்ட மற்றும் கூட்டு வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது, உலகிற்கு நற்செய்தி சாட்சிகளாக மாறுவதற்கு நம்மை சவால் செய்கிறது.
இந்த சுவிசேஷம் எல்லா மக்களுக்கும் எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் ஒரே மாதிரியாக உள்ளது. எல்லா மக்களும் தங்கள் பாவக் கிளர்ச்சியிலிருந்து மனந்திரும்பவும், கிறிஸ்துவை நம்பவும் அழைக்கப்படுகிறார்கள். எல்லா மக்களும் அவருடைய கர்த்தத்துவத்திற்கு அடிபணிந்து அவருடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அப்போஸ்தலருடைய காலத்திலிருந்து உலகம் முழுவதும் பிரகடனப்படுத்தப்பட்டதைப் போலவே, இந்த அழைப்பு நம் நாளில் ஒவ்வொரு நபருக்கும் செல்ல வேண்டும். கீழ்ப்படிதலுக்கான அழைப்பு யூதர்கள் மற்றும் புறஜாதிகள், பணக்காரர்கள் மற்றும் ஏழைகள், ஆண் மற்றும் பெண், மதிக்கப்படுபவர் மற்றும் இகழப்படுபவர்களுக்கானது. இது அனைத்து வகையான எதிர்ப்புகளையும் தடைகளையும் கடந்து செல்கிறது, ஏனெனில் இது அவரது பிதாவின் மகிமைக்காக அவரது பரிசுத்த ஆவியால் அதிகாரம் பெற்ற ஆட்சி செய்யும் கிறிஸ்துவின் வார்த்தையாகும். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் கற்பிப்பது போல, மீட்பின் வளர்ச்சி மற்றும் பரவலை எதிர்க்க எந்த சோதனையும், பதற்றமும், எதிர்ப்பும் போதுமான வல்லமை வாய்ந்தது அல்ல. அதனால்தான், நவீன கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களின் நற்செய்தியை அறிவிப்பதிலும், உறுதிப்படுத்துவதிலும், அனைவரையும் மனந்திரும்புவதற்கும் கிறிஸ்துவில் விசுவாசிக்கும்படியும் அழைப்பதற்கு தைரியமாக இருக்க வேண்டும். தேவனுடைய ராஜ்யத்தின் விசுவாசமான குடிமக்களாக இருக்க அவர்களை அழைக்க வேண்டும்.

முடிவுரை

இந்த பாடத்தில், அப்போஸ்தலர் புத்தகத்தில் லூக்கா பயன்படுத்திய சொல்லாட்சி உத்திகள், அவரது பணியின் உள்ளடக்கம் மற்றும் அவரது போதனைகளின் நவீன பிரயோகத்தை நோக்கி எடுக்க வேண்டிய பொருத்தமான முதல் படிகள் ஆகியவற்றைப் பார்த்தோம். இந்த காரியங்களை ஆராய்வது, நமது நாளில்

-23-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடம் 2: உள்ளடக்கமும்

அவருடைய அதிகாரபூர்வமான போதனைகளைப் புரிந்துகொள்வதற்கும், பாராட்டுவதற்கும், அதன்படி வாழ்வதற்கும் ஒரு வழியை நமக்கு வழங்கும்.
பல வழிகளில், அப்போஸ்தலர் புத்தகம் கிறிஸ்துவின் காலத்திற்கும்
நவீன சபையின் காலத்திற்கும் இடையிலான வாசலாக செயல்படுகிறது. ஆரம்பகால சபையில் கிறிஸ்துவாகிய நபர், அவரின் பணி மற்றும் போதனைகள் எவ்வாறு புரிந்து கொள்ளப்பட்டன மற்றும் பயன்படுத்தப்பட்டன என்பதை இது விளக்குகிறது, மேலும் நவீன கிறிஸ்தவர்கள் அதே கருத்துக்களை தங்கள் வாழ்க்கையில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் இது அடித்தளமாக அமைகிறது. எனவே, அப்போஸ்தலருடைய நடபடிகளில் லூக்காவின் நோக்கங்களையும் வழிமுறைகளையும் நாம் எந்தளவுக்கு அடையாளம் காண முடிகிறதோ, அந்தளவுக்கு நாம் உயிர்த்தெழுந்த ராஜாவைக் கௌரவிப்பதற்கும் அவருக்குச் சேவை செய்வதற்குமான வழிகளில் வாழத் தயாராக இருப்போம்.

-24-

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.